பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 14 வெள்ளிக்கிழமை 31.03.2023 கதிர் 142

# புதிய பயங்கரவாதச் சட்டத்தை எதிர்த்து தேவை எனில் நீதிமன்றம் செல்லுங்கள்

## இப்படி எடுத்தெறிகிறார் நீதி அமைச்சர்



புதிய பயங்கரவாதத் எதிர்ப்புச்சட்டத்துக்கான வரைவுக்குப் பல தரப்புக் களில் இருந்தும் கடுமை யான எதிர்ப்புக்கள் வெளி யிடப்பட்டு வரும் நிலை யில், தேவைப்பட்டால் நீதிமன்றத்திற்குச் செல்லுங்கள் என்று எடுத்தெறிகிறார் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ.

சர்வதேச நாடுகளுடன் ஒப்பிடுகையில் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறைந்தவலுவுடையது என்றும் அவர் நியாயப் படுத்துகின்றார்

☞ 2

## இது ரகசியம் அல்ல!

குற்றங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களில் முக்கியமாகக்கலந்துரையாடப்பட்ட ஒருவிடயத்தை குறிப்பிட்டுச் சொல்வது அவசியம்.

அது குற்றவாளிகளுக்குப் பிணை வழங்குவது தொடர்பானது. அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் எனது செய்தியாளர் என்க்கு அறிக்கையிட்ட விவரங்களை அப்படியே தருகின்றேன் பாருங்கள்.

குற்றச்செயல்களை கட்டுப்படுத்த அனைவரும் கூட்டம் நடாத்துகின்றோம் ஆனால் 5 அல்லது 6 தடவை கைதாகிய ஒருவருக்கு மீண்டும் பிணை வழங்குவதற்காக கிராம அலுவலரின் சிபாரிசு கேட்டு வந்து நிற்பது சங்கடத்தைத் தருவதாக கிராம சேவகர்கள் தம்மிடம் குறைப்படுகின்றனர் என பிரதேச செயலர்கள் கூட்டத்தில் தெரிவித்தனர்

☞ 2

## நாட்டில் தொழிற்சங்கமே இருக்கவேண்டியதில்லை

### பெரமுவின் எம்.பி.கோகிலா குணவர்த்தன தெரிவிப்பு

நாட்டில்தொழிற்சங்கங்களே இருக்கவேண்டிய அவசியம் கிடையாது என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொழிற்சங்கங்கள் இந்த நாட்டில் இருக்க வேண்டியதில்லை. தொழிற்சங்கங்கள் பொது மக்களின் நிலைமைகளை கருத்தில் கொள்வதில்லை. அவை தமது இலக்குகளையே மையப்படுத்திச் செயற்படுகின்றன.

பொது மக்களுக்கு என்னநடந்தாலும் பரவாயில்லை தமது தேவைகள்

☞ 2

## அமைச்சர் காஞ்சனவின் மீது அவரது கட்சியே அதிருப்தி

அமைச்சர் காஞ் சன கட்சியின் யோசனைகளின்றி அமைச்சரவைத் தீர்மானங்களின் அடிப்படையிலேயே செயற்படுகின்றார் என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார். அமைச்சரின் செயற்பாடுகள் தொடர்பில் கட்சி ஏற்கனவே அதிருப்தியில் இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள பொதுஜனபெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி தனது அதிகாரங்களை அமைச்சர்களுக்கு

☞ 2

## தமது தலைவரையே கைகழுவியது ‘மொட்டு’ தரப்பின் தொழற்சங்கம்

### பணி நிறுத்தத்திற்கும் தமக்குப் தொடர்பில்லை எனவும் தெரிவிப்பு

பெற்றோலியக் கூட்டத்தாபனத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக எமக்கு எவ்வித மான அறிவித்தலும் விடுக்கப்படவில்லை என்று கூறித் தமது தலைவரை ஸ்ரீங்கா பொது ஜன பெரமுன வின் தொழிற்சங்கமான முற்போக்கு சேவை சங்கம் கைகழுவி விட்டுள்ளது.

தொழிற்சங்கமான முற்போக்கு சேவை சங்கத்தின் அங்கத்தவரான பந்துல சமன் குமார பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் தற்போது இடம்பெற்று வரும் தொழிற்சங்க நடவடிக்கைக்குத் தலைமை தாங்கி வரும் நிலையில் அவரது தொழிற்சங்கம் இப்படி அவரைக் கைகழுவி விட்டுள்ளது.

இதனால்

☞ 2

## சவேந்திர சில்வாவை அகற்ற மொட்டுக் கட்சி தீவிர முயற்சி



பாதுகாப்புப் படைகளின் பிரதானி சவேந்திரசில்வாவை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான ஆயத்தங்கள் இடம்பெற்று வருகின்றன என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மஹிந்தராஜபக்ஷ தலைமையினலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர் மீது கோபத்தில் இருக்கின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தவருடம் மேமாதம் அரசுக்கு எதிராகத் தீவிரம் அடைந்த போராட்டத்தின் போது, ஸ்ரீலங்கா

☞ 2

## பொதுச் சொத்துக்கு தீ வைத்தால் விரைவில் வரும் தடைச் சட்டம்

### இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவிப்பு



அரச சொத்துக்கள் உள்ளிட்ட பொதுச் சொத்துக்களுக்குத்தீவைப்பவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய சட்டங்களைக் கொண்டு வரப்படவுள்ளதாக நீதிமற்றும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் அனுராதஜயரத்ன தெரிவித்தார்.


பத்தரமுல்லவில் உள்ள பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம்புனவர்வாழ்வுஅளிப்பதற்காக சட்டமூலத்தினைக் கொண்டு வந்திருந்தோம். அது போதைப்பொருளினால் பாதிக்கப்படுபவர்களை மீட்டு எடுப்பதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

☞ 2

## ‘மெட்டு’ தொழிற்சங்க தலைவர் மீதான நடவடிக்கை மஹிந்தவுக்கு தெரியாதாம்

### அவரே சொன் பதில் இது



பொதுஜனபெரமுனவின் தொழிற்சங்கப் பிரதிநிதி பணியிலிருந்து கட்டாய விடுமுறையில் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தான் அறியவில்லை என்றும் ஆராய்ந்து பார்ப்பதாகவும் அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வின் பின்னர் செய்தியாளர்கள் அவரிடம் இது தொடர்பில் கேள்விஎழுப்பினர். அப்போது அவர் இதனைத் தெரிவித்தார். ”பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ள உங்களது கட்சியின்

☞ 2

## அதிகாரத்துக்காக பெரமுனவினர் கொள்கையைக் கடாசிவிட்டனர்

### சுதந்திர மக்கள் சபை கடும் விமர்சனம்

அதிகாரத்துக்காக பெரமுனவின் கொள்கைகளை கைவிட்டுள்ளதாக சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி நாலக்க கொடஹேவா தெரித்தார்.

இராஜகிரயவில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் வியாழக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போது பொது ஜன பெரமுனவின் கொள்கைக்கு எதிரான செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

தேசியவளங்களைவிற்பனை செய்வதற்கு கோட்டாபய ராஜபக்ஷவோ அல்லது மஹிந்த ராஜபக்ஷவோ மக்கள் ஆணையைக் கோரவில்லை. அவர்கள் தேசிய வளங்களை விற்பனை செய் வதில்லை என்ற கொள்கையை உடையவர்கள்.

அவ்விதமானவர்கள், மக்களிடத்தில் ஆணை கேட்டபோதுதான் 69 இலட்சம் வாக்குகள் கிடைத்திருந்தன. ஆகவே, தற்போது அந்த வாக்குகளுக்கு எதிரான செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

கொள்கைக்கு

☞ 2

## தமிழ்நாட்டில் நேற்று இரவு சிக்கியது 6 கிலோ தங்கம்

### இலங்கையிலிருந்து கடத்தப்பட்டதாக சந்தேகம்

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து கடத்திச் செல்லப்பட்டதாக கருதப்படும் 6 கிலோ தங்கம் தமிழ்நாட்டின் வேதா ளைப் பகுதியில் இந்திய அதிகாரிகளினால் கைப்பற் றப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு கடல்வழியாக நேற்றுவியாழன் இரவு தங்கம் கடத்தப்படுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் தமிழகத்தின் வேதாளைக் கடற்கரையில் வைத்து தங்கத்துடன் இரு சந்தேக நபர்களை இந்திய மத்தியவருவாய் பகுதியின் புலனாய்வு பிரிவினர் கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட தங்கம் இலங்கை நாணயத்தில் 125 மில்லியன் ரூபா பெறும தியானது என்று அதிகாரிகள் கூறுகின்றனர். கைதுசெய்யப்பட்ட இருவரும் இலங்கையரா அல்லது இந்தியரா என உடனடியாக உறுதிபடுத்த முடியவில்லை.

## சைவ மக்களுடைய உரிமையை இந்த ஆட்சி பாதுக்காக வேண்டும்

### மாவை சேனாதிராசா வலியுறுத்து



சைவ மக்களுடைய உரிமையை இந்த ஆட்சியாளர்கள் பாதுக்காக வேண்டும் என தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

வவுனியாவில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

☞ 2

## தமிழ் மக்கள் தமது உரிமைகளை அடைய இன்னும் எத்தனை காலம் காத்ததிருப்பு?

### கஜேந்திரகுமார் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கேள்வி




தமது உரிமைகளை அடைய தமிழ் மக்கள் இன்னும் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கேள்வி எழுப்பினார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

அவர் ஆற்றிய உரை தொடர்பாக அவரது கட்சி வியாழக்கிழமை அனுப்பி வைத்த செய்திகள் குறிப்பீல் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் 52ஆவது அமர்வில், விடயம் 8 தொடர்பான விவாதத்தின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திட்டச் செயற்பாட்டுக்கான வியன்னா 66ம் பிரகடனத்தின் (Vienna Declaration and Programme

☞ 2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச் செயல்களில் தொடர்புபட்டோருக்கு பிணை வழங்குபவரின் சொத்து மற்றும் நன்னடத்தை குறித்து கிராம அலுவலரின் பரிந்துரைக் கடிதம் நீதிமன்றத்திக்கு அவசியம். அந்தக் கடிதத்தை கிராம அலுவலர் வழங்காவிட்டால் அவர்நீதிமன்றத்திற்குஅழைக்கப்படுகின்றார். பெரிய குற்றவாளிகள் 5 அல்லது 6 தடவை கைது செய்யப்பட்ட பின்னர் பிணையில் வெளியே வருகிறார்கள். அவர்களுக்கு மீண்டும் மீண்டும் பிணைக்குக்கேட்டுவந்தால்உண்மை தெரிந்த கிராம அலுவரால் எப்படி அதனை அனுமதிக்க முடியும்? இது நீதிமன்றநடவடிக்கை என்பதனால் ஏதும் கதைக்கவும் முடியவில்லை எனவேதயவுசெய்துஇதனை நாடாளுமன்றத்திற்குகொண்டு செல்லுங்கள்என்றுகூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இது குறித்துநீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு கடிதம் எழுதியதனால் கடிதம் எழுதியதற்காக தமக்கும் பெரும் பிரச்சினை எழுந்ததாகப் பொலிஸாரும் பக்கப்பாட்டுப் பாடினர். கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புத்திசாலித்தனமாக, இதனைக் கதைக்க எனக்கும் பிடியானையோ தெரியாது என்றபடியே விவகாரத்தை அப்படியே அமுக்கி வாசித்துவிட்டார்.

இந்தக் கூட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் பொலிஸார் சிறப்பாகச் செயற்படுகின்றார்கள் என்று பிரதேச செயலர்கள் பாராட்டுப்பத்திரம் வாசித்தாலும் ஒரு சில இடங்களில் பொலிஸாரின் பணி பற்றிய குறை நிறைகளும் இருக்கத்தான் செய்தன.

நல்லூரில் 2023-02-28 இல் ஓர் மோட்டார் சைக்கிளில் சமுர்த்தி பயனாளிகள் வீட்டிற்குச் சென்று சமுர்த்தி அலுவலகத்தில் இருந்து வருவதாக கூறி மோசடியில் ஈடுபட்டவரை மோட்டார் சைக்கிளுடன் பிடித்து பொலிஸில் கொடுத்தோம் ஆனால் அதே மோட்டார் சைக்கிள் மார்ச் மாதம் ஊர்காவற்றுறையில் அதேபோன்ற மோசடிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது எப்படிச் சாத்தியமாயிற்று என்று கேள்வி எழுப்பப்பட்டது.

குற்றவாளிகள் குறித்ததும் குற்றப் பின்னணி உடையவர்கள் குறித்தும் பொலி- ஸாருக்குத் தகவல் கூறுபவரின் வீடுகளிற்கு கல் எறி விழுகின்றன அது எப்படி என்றும் கேட்கப்பட்டது.

உண்மை என்ன என்பது சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்குத்தான் தெரியும். எனினும் பொது வெளியில் இந்த விவகாரங்களும் அலசப்படுகின்றன என் பதை மக்களும் தெரிந்துகொள்வதற்காக இங்கே சொல்லியிருக்கின்றேன்.

- இடிமின்னல் -

## புதிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதி அமைச்சின் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளது. யாராவது அதனை அடிப்படை உரிமைகளுக்குக் குற்தகம் விளைப்பதாகக் கருத்தினால் உயர் நீதிமன்றத்தினை நாடாலாம்.

நாடாளுமன்றத்திற்கு விவாதத்திற்குவருகின்றபோது தமது மக்கள் பிரதிநிதியைப் பயன்படுத்தி அதனை மாற்றி அமைக்கலாம்.

எவ்வாறாயினும், தற்போது தொழிற்சங்கங்கள் புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் தமது போராட்டங்களை ஒடுக்கலாம் என்று குற்றம் சாட்டுக்கின்றன. உண்மையில் அவ்விதமாகச் செயற்பட முடியுமாக இருந்தால் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் ஆகிவிடுவார்கள்.

இந்தச் சட்டத்தின் மூலமாக நீதித்துறையின் முழுமையான கண்காணிப்பு நீடிக்கப்படவுள்ளது. அத்துடன் பிரதிப்பொலிஸ்மா அதிபர் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் வாய்ப்புக்கள் ஏற்படுகின்றது - என்றார்.

## நாட்டில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவுக்கு வரவேண்டும் என்பது தான் அவர்களின் நோக்கமாகவுள்ளது. ஆட்சி என்ற ரீதியில் முன்னெடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வெண்டியுள்ளது. தொழிற்சங்கங்கள் அதற்கு இடையூறாக இருக்கின்றன.

ஆகவே பொதுமக்களையும், ஆட்சியையும் மையப்படுத்திச் செயற்படாத தொழிற்சங்கங்கள் எதற்கு என்பது தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுகின்றது - என்றார்.

## அமைச்சர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகிர்ந்தளித்துள்ளார். இதனால் அமைச்சர் காஞ்சன விஜயசேகரவும் நிறைவேற்று அதிகாரத்தினை தானும் கொண்டிருக்கிறார் என்று கருதுகின்றார்.

காஞ்சன விஜயசேகர தனது செயற்பாடுகள் தொடர்பில் எம்முடன் கலந்துரையாடுவதில்லை. அமைச்சரவைத் தீர்மானங்களை எமக்கு தெரிவிப்பதில்லை. அமைச்சரவைத் தீர்மானங்களின் பின்னர் அவர் கட்சியின் யோசனையைக் கேட்பதில்லை.

இவ்வாறான நிலையில் அமைச்சர் காஞ்சன போன்றவர்கள் எடுக்கும் தீர்மானங்கள் தொடர்பில் நாம் கட்சிக்கு அப்பால் சென்று சிந்திக்க வைத்துள்ளது.

அமைச்சர் காஞ்சனவின் செயற்பாடுகள் தொடர்பில் ஏலவே நாம் அதிருப்தியில் உள்ளோம். அதேநேரம், நாம் அமைச்சரை பிரச்சினையின் சூத்திரதாரியாக்கி விரல் நீட்டப்போவதில்லை என்றார்.

## தமது தலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோலியக் கூட்டுத்தபானத்தினால் கட்டாய விடுமுறையில் அனுப்பி வைக்கப்பட்ட 20 பேரில் ஒருவராக அவரும் காணப்படுகின்றார். அத்துடன்அவர் பொது ஜன பெரமுனவின் கொள்கைக்கு எதிராகளிசக்தித்துறைஅமைச்சர் காஞ்சன விஜயசேகர மற்றும் ஆட்சியாளர்கள் செயற்படுகின்றனர் என்றும் விமர்சனங்களை முன்வைத்தார்.

இந்த நிலையில், குறித்த சங்கத்தின் ஆலோசகரான காமினி லொக்குகே தெரிவித்ததாவது:

பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் ஊழியர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தால் அவற்றைப் பெறுவதற்காக நாம் நிச்சயமாகக் குரல்கொடுப் போம். அதற்காக சட்டத்திற்கு முரணான விடயங்களை முன்னெடுக்க முடியாது. பிறிதொரு நிகழ்ச்சி நிரலில் செயற்பட முடியாது.

அதேநேரம், பொது ஜன பெரமுன பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக எமக்கு அறிவிக்கவில்லை. அவ்வாறான நிலையில் போராட்டத்தில் பங்குபற்றியவர்களை எமது கட்சியின் தொழிற்சங்கம் சார்பில் தீர்மானம் எடுக்கப்பட்டு பங்கேற்றவர்களாகக் கொள்ள முடியாது.

அவர்கள் தமது சுயவிருப்பிலேயே பங்கேற்றுள்ளனர். அதற்கும் எமது கட்சிக்கும், அதன் தொழிற்சங்கத்துக்கும் எவ்விதமான தொடர்புகளும் கிடையாது - என்றார்.

## சவேந்திர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன.

அப்போது இராணுவத் தளபதியாக இருந்த சவேந்திர சில்வா, வன்முறையைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்காததே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அதிகாரத்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்ற பேகாது ஆடைகளை அணிந்து கொண்டுபெரமுனவின்உறுப்பினர்கள் அதற்கு எவ்வாறு கைகளைஉயர்த்துகின்றனர் என்ற கேள்வி எமக்குள்ளது. இதற்கு பொது ஜன பெரமுன பதிலளிக்க வேண்டும்.

துரதிஷ்டவசமாக அந்த பெரமுனவின் உறுப்பினர்கள் கொள்கைக்காகநிற்கவில்லை. அவர்கள் அதிகாரத்துக்காகவே செயற்படுகின்றார்கள். அதிகாரத்துக்காக கொள்கைகளை தூக்கிப்போட்டுள்ளனர் - என்றார்.

## பொதுச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச சொத்துக்களை சேதமாக்குபவர்கள், தவறாக பயன்படுத்துபவர்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

அதேநேரம், நிறைவேற்று அதிகாரத்தின் வீட்டுக்கும், நாடாளுமன்றத்திற்கும் தீவைக்கும் தரப்பினரைக் கட்டுப்படுத்தவேண்டும். அதற்காகச் சட்டம் அவசியமாகவுள்ளது. ஆகவே அவசியமிருந்தால் நாம் புதிய சட்டமூலத்தினைக் கொண்டுவருவதற்குத் தயராகவே உள்ளோம் - என்றார்.

## ‘மெட்டு’ ....

தொழிற்சங்கப் பிரதிநிதிக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ளதல்லவா?” என்று கேள்வி எழுப்பப்பட்டது.

உடனே ''அப்படியா? அதனைநான்அறியவில்லை” என்றார்.

”பின்னர், உங்களுடைய கட்சிக்காக பந்துலசமன்குமார பலபணிகளைஆற்றியுள்ளார் அல்லவா?'' என்றபோது ''ஆமாம் ஆமாம்'' என்று மஹிந்த பதிலளித்தார்.

“எனினும், நீங்கள் அவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்களை அறியாதிருக்கின்றீர்களே'' என்று மீண்டும் கேள்வி எழுப்பியபோது, “நான் பார்க்கின்றேன். அந்த விடயத்தினை ஆராய்ந்து கவனத்தில் கொள்கின்றேன்'' என்று கூறியபடியே அவ்விடத்திலிருந்து உடனடியாகவே வெளியேறிவிட்டார்.

## சைவ மக்க .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடுக்குநாறி ஆலயப் பகுதி அழிக்கப்பட்ட ஒரு பிரதேசமாக காட்சியளிக்கிறது. சைவ மக்களுடைய மத உரிமை, அந்த இடத்திற்கு சென்று வழிடுவதற்கான உரிமை மறுக்கப்பட்டநிலையில்இதை யார் செய்தார்கள் என்று தெரியாத அளவுக்கு அந்த இடம் அழிக்கப்பட்டுள்ளது.

அந்தக்கோவில்மீண்டும் கட்டப்படவேண்டும். அந்த மக்கள் கோவிலில் மீண்டும் வழிபடவேண்டும். அந்த உரிமையை சைவ மக்களுக்கு வழங்க வேண்டும்.

சில தினங்களுக்கு முன் வெடுக்குநாறி மலை சிவன் ஆலயம் அழிக்கப்பட்டமைக்குஎதிராகஎனதுஆட்சேபனையை ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தேன். அந்த விடயங்களை அனுப்பி வைத்தால்உரியநடவடிக்கை எடுப்பதாக அவர் கூறினார்.

எமது வேண்டுகோள், சைவதலங்கள்பாதுகாக்கப்பட வேண்டும். அந்த தலங்களை அழித்தவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக் குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சைவ மக்களுக்கும், அவர்கள் வணங்கும் கோவில்களுக்கும்பாதுக்கப்பு வழங்கப்படவேண்டும்என்று தொலைபேசியில் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தேன்.

இந்த இடம் சைவ மக்களுடைய இடம். அதை சுற்றி படையினர், தொல்பொருள் திணைக்களத்தினர் இருக்கிறார்கள். அவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

தமிழ் மக்களினுடைய அல்லது சைவ மக்களுடைய மத உரிமையை இந்த ஆட்சி பாதுகாக்க வேண்டும். அழிக்கப்பட்ட ஆலயம் மீள நிறுவப்பட்டு அது பாதுகாக்கப்படவேண்டும் எனக்கோரினேன் இதனையே மக்களும் ஆர்ப்பாட்டத்தின் மூலம் சொல்லியுள்ளார்கள். ஆகவேஜனாதிபதி அவர்கள் பொறுப்போடு செயற்பட வேண்டும் - எனத் தெரிவித்தார்.

## தமிழ் மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

of Action), இரண்டாவது பந்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

எல்லா மக்களும் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். இந்நெறிமுறைகளின்படி, தமது அரசியல் நிலைப்பாட்டையும், பொருண்மியம் மற்றும் சமூக கலாச்சார விடயங்களையும் மேற்கொள்ளும் வழி வகைகளைத் தீர்மானிக்கும் உரித்துடையவர்களாக அவர்கள் இருப்பர் அப்பிரகடனத்தில், மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுதலிப்பது மனிதவுரிமை மீறலாகவும், அவர்களது உரிமையினை முறைப்படி நிலைநாட்டுவதனை மறுதலிக்கும் செயல் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிலங்காவில் - தமிழர்கள் ஒரு தேசமாக, சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய அனைத்துத் தகைமைகளையும் கொண்டிருக்கிறார்கள்.


தமிழ் மக்கள் தமது பொருண்மிய, சமூக, கலாசார மேம்பாட்டை மேற்கொள்வதற்கான உரிமையை, தொடர்ச்சியாக ஆதிகாரத்திற்கு வந்த சிங்களப் பெரும்பான்மை ஆட்சிகள் மறுத்துவந்த காரணத்தாலும், தமிழ் மக்களது இருப்புக்கு ஆபத்து உருவாகி வந்ததனாலும், 1977ஆம் ஆண்டு, தமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு தனிநாட்டினை அமைப்பதற்கு ஆதரவு வழங்கி, ஜனநாயக ரீதியில் பெருந்திரளாக வாக்களித்தார்கள்.

அதன் பின்னர், சிறிலங்கா ஆட்சிகள் அரசமைப்பில் கொண்டு வந்த 6 ஆவது திருத்தத்தின் அடிப்படையில், தனிநாடு கோருவதனை சட்டவிரோதமானதாக்கப்பட்டது. நடைமுறையில் இவ்விடயம் தவறாக வியாக்கியானப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது நடைமுறையிலிருக்கின்ற, மத்தியில் அதிகாரங்களைக் குவித்து வைத்திருக்கும் ஒற்றையாட்சி முறையிலான அரசமைப்பிலிருந்து, அதிகாரப் பரவலாக்கத்தை நோக்கிய மாற்றங்கள் பரிந்துரைக்கப்படுவத னைக்கூட, பிரிவினைவாதமாகப் பார்க்கப்படும் நிலையே காணப்படுகிறது.

இதன்விளைவாக - தமது அரசியல் நிலைபாடு தொடர்பில் காத்திரமான உரையாடலுக்கான வெளி, தமிழ் மக்களுக்கு மறுக்கப்படுகிறது.

தலைவர்அவர்களே,தமது உரிமைகளை அடைவதற்கு தமிழ் மக்கள் இன்னமும் எவ்வளவு காலம்தான் காத்திருக்கவேண்டும்? - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622







# பலாலியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த ஆலய விக்கிரகங்கள் சூறையாடப்பட்டுள்ளன

பலாலியில் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த பழைமை வாய்ந்த இராஜ ராஜேஸ்வரிஅம்மன்ஆலயத் தின் விக்கிரகங்கள் சூறை யாடப்பட்டுள்ளன.

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் காணப்பட்ட விக்கிரகங்கள் இரண்டைக் காணவில்லை என ஆலய பரிபாலன சபைத் தலைவர் பலாலிபொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

அத்துடன்தெல்லிப்பழை பிரதேச செயலகத்திலும் விக்கிரங்கள் காணாமல் போயுள்ளமை சம்பந்தமாக முறைப்பாடு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

1846 ஆம் ஆண்டு அம் மன் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டு அங்கே ஒவ் வொரு கடவுளர்களின் விக்கி ரகங்களும் வைக்கப்பட் டிருந்தன. அன்றைய காலம் தொடக்கம் உச்சவ காலங்களில் பூஜை வழிபாடு கள் நடைபெற்று வந்தன.

பின்னர் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி எமது கிராமத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலைகாரணமாகஎமதுகிராம மக்கள்வெளியேறி யாழ்குடா நாட்டில்உள்ளபலபகுதிகளில் இடம் பெயர்ந்து வாழ்ந்து வந்தனர் வாழ்ந்து வரும் காலத்தில்2002ஆம்ஆண்டு இந்து கலாசார அமைச்சராக இருந்த மகேஸ்வரனாலும் எமது கிராம மக்களின் முயற் சியினாலும் இந்த ஆலயத் துக்கு சென்று வரக்கூடிய சூழ் நிலை உருவாக்கப்பட்டது.



2002 ஆம் ஆண்டிலி ருந்து 2006 ஆம் ஆண்டு மே மாதம் மட்டும் இந்த ஆலயத்துக்கு சென்று வந்த போதும் நல்ல நிலையிலே ஆலயம் இருந்தது. ஆலய விக்கிரமங்களும் இருந்தன.

2015 ஆம் ஆண்டு ஜன வரிமாதம்26ஆம்திகதிமீண் டும்இந்தஆலயத்துக்குசென்ற போதுவிக்கிரகங்கள்எல்லாம் நல்ல நிலையிலே இருந்த தன.

தற்போது வரை இந்த ஆலயத்துக்கு விசேட தினங் களுக்கு சென்று வந்து கொண்டிருக்கின்றோம் அப்படி இருக்கின்ற போது இப்பொழுது 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி திருவம்பாவை தி னத்திற்கு சென்ற பொழுது முருகன் சிலை காணாமல் போயிருந்தது

தற்போது முருகன் விக் கிரகம் காணாமல் போயுள் ளது. வடக்கின் மிகப்பெ ரும் இராணுவ தளமாக விளங்குகின்ற பலாலி இரா ணுவ தளத்தின் உயர் பாது காப்பு நிலையத்தில் அமைந் துள்ள குறித்த ஆலயத்தின் விக்கிரகங்கள் இராணுவத்தி னருக்கு தெரியாமல்எவ்வாறு காணாமல் போய் உள்ளன என நிர்வாக தலைவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். 24 மணி நேரங்களும் ஆல யத்தை சூழ உள்ள பகுதி களிலும் பாதுகாப்பு கடமை யில் இராணுவம் ஈடுபட்டி ருக்கின்ற போது நாம் பூஜை வழிபாடுகளுக்கு செல்வதற் குக் கூட இராணுவத்தின் அனுமதியைப் பெற்று செல் கிறோம். இவ்வாறு நிலைமை இருக்கின்ற பொழுது குறித்த விக்கிரகங்கள் படிப்படியாக காணாமல் போனமைக் கான பிரதான காரணம் என்ன? இது தொடர்பாக பொலீஸ் முறைப்பாடுசெய்யப் பட்டுள்ளது இதற்கான பதி லுக்காக காத்திருக்கிறோம் என்றார்

இதற்கும் இராணுவத் திற்கும் தொடர்பு இருப்பதாக வும் தான் சந்தேகப்பதாக ஆலய நிர்வாகிகள் தெரிவிக் கின்றனர்.

அண்மைக்காலமாக பௌத்தமயமாக்கலின் அங்கமாக இடம்பெறும் கச்ச தீவில் பௌத்த ஆதிக் கத்தை மேற்கொண்டமை வெடுக் குநாறிமலையில் ஆதிலிங் கேஸ்வரர்சிலையைஉடைத் தெறிந்தமைஉள்ளிட்டசெயல் களின் தொடர்ச்சியாகவே பலாலி இராஜேஸ்வரி அம் மன் ஆலயத்தின் விக்கிரகங் களும் சூறையாடப்பட்டுள்ள னவா என சந்தேகம் எழு கின்றது.

# சட்டவிரோத மண் அகழ்வுக்கு எதிராக மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்டம்





மன்னாரில் சட்டவிரோத மண் அகழ்வுக்கு எதிராக கவனவீர்ப்பு போராட்டம் நேற்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்றது.

இந்தப் போராட்டம் மன் னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலை வர் வீ.எஸ்.சிவகரன் தலை மையில் இடம்பெற்றது.

மன்னாரிலுள்ள பலதரப் பட்ட அமைப்புக்களின் முக்கி யஸ்தர்களும் மதத்தலைவர் களும் கவனவீர்ப்புப் போராட் டத்தில் கலந்து கொண்டனர்.

இவர்கள் பலதரப்பட்ட வாசகங்கள் கொண்ட பதா தைகளை தங்கள் கையிலேந் திய வாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அதாவது - 'அரசியல் வாதிகளே நீங்களும் இதற்கு உடந்தையா?', 'எதிர்கால சிந்தனை அற்ற பொறுப்பற்ற அரச அதிகாரிகளே', 'மன் னாரை பாலைவனமாக்கப் போகின்றீர்களா?', 'விவசாய நிலங்கள் உவராகி விட்டன் வாழ்வுக்கு வழியேது?', 'சட்டத்தரணிகளே மண் ம ாப் பியால்களை காப்பாற்றா தீர்கள்' இவ்வாறு கொண்ட வாசகங்கள் ஏந்திய வண் ணம் காணப்பட்டனர்.

'இயற்கையே பேரி றை வன் மண்ணும் மரமும் இல் லையேல் மனிதன் உயிர்வாழ முடியாது. இயற்கைக்குஎதிரான மனி தனின் செயற்பாடே இயற்கை பேரிடருக்கு அடிப் படை ஆகவே, இயற்கையை காப்போம்' என்ற தொனிப் பொருளிலும் கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றதுடன் பொதுமக்களுக்கு இது தொடர் பாக துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# உக்ரைன் போர் முடிவின் அவசியம்

ரஷ்யா உக்ரைனில் போரைத் தொடங்கி ஒரு வருட காலத்திற்கும் மேலாகிவிட்டது. ஆனாலும் அந்தப் போர்முடிவதற்கான அறிகுறிகள் எவையும் இல்லை. இன்னும் தீவிரமடைவதற்கான வாய்ப்புக்களே தென்படுகின்றன.

உக்ரைனுக்கு அமெரிக்க உள்ளிட்ட மேற் குலக நாடுகள் தொடர்ச்சியாக ஆயுதங்களை வழங்கி வருகின்றன. அதனால் உக்ரைன் தொடர்ந்து எதிர்த் தாக்குதலை நடத்திவருகின்றது. அமெரிக்கா தொடர்ச்சியாகப் பல மில்லியன் கணக்கான நிதிக்கு ஆயுதங்களை வழங்கிக் கொண்டே இருக்கின்றது. பதிலுக்கு ஏனைய மேறகு நாடுகளும் தத்தம் பங்குக்கு ஆயுத உதவிகளை வழங்கி வருகின்றது.

மறுபக்கத்தில் ரஷ்யாவுக்குத் துணை நிற்கும் நாடுகள் மிக மிகக் குறைவானவையாகவே உள்ளன. அதில் முக்கியமானது சீனா. அந்நாட்டு அதிபர் அண்மையில் ரஷ்யாவிற்குச் சென்று அதிபர் விளாடிமிர் புடினைச் சந்தித்துப் பேசியிருந்தார். ரஷ்யாவிற்கு இந்தப் போரில் சீனா ஆயுத உதவிகளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் இது–வரையில் சீனா அப்படிச் செய்யவில்லை.

இருப்பினும்சீனஅதிபரின்பயணத்தைத்தொடர்ந்து உக்ரைனைக் குறிவைத்து பெலாரஸில் தனது அணு ஆயுதங்களை நிலைநிறுத்தப்போவதாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அறிவித்திருக்கிறார். இது உலகில் மீண்டும் ஓர் அணு ஆயுதப் போர் மூழக்கூடும் என்கிற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் நோக்கம் ரஷ்யாவுக்கு இல்லை என்று அமெரிக்கா அறிவித்திருந்தாலும்கூட உக்ரைன் போர் அணு ஆயுதக் களம் நோக்கி வெளிப்படையாக நகர்ந்திருப்பதே உலகின் எதிர்காலத்தை அச்சுறுத்துவதாக உள்ளது. ஒட்டு மொத்த உலகின் பாதுகாப்புக்காகவும் உடனடியாக இந்தப் போர் நிறுத்தப்படவேண்டியதன் அவசியத்தையும் அது வலியுறுத்தி நிற்கின்றது.

ஏற்கனவே 2ஆம் உலகப் போர் முடிவின்போது இந்த உலகம் அணு குண்டுகள் வீசப்பட்டதனால் ஏற்பட்ட பெரும் அழிவுகளை இந்த உலகம் பார்த்திருக் கின்றது. அதுபோன்ற மற்றொரு கொடூரத்தை உலகம் தாங்காது. எனவே உலகை அணு ஆயுத மோதல் ஒன்றை நோக்கி அழைத்துச் செல்லும் நுழைவாயிலைத் திறந்திருக்கும் உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருதன் மூலமே உலகின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

ரஷ்யா அணு ஆயுதங்களைப் பயன்படுத்தினால் அமெரிக்காவும் ஏனைய அணுச் சக்தி வாய்ந்த நாடுகளும் இணைந்து ரஷ்யா மீது அணு ஆயுதத் தாக்குதலை நடத்துவதற்கான சாத்தியங்களை நிராகரித்துவிட முடியாது என்பதனால் மட்டுமே ரஷ்யா அணு ஆயுதத்தை இந்தப் போரில் பயன்படுத்தாது என்கிற தர்க்க நியாயம் ஏற்புடையதல்ல. ரஷ்யா ஒரு மிரட்டலுக்காகவேகூட அணு ஆயுதங்களை பெலாரஸில் நிலைநிறுத்தியிருந்தாலும் அதன் வழியாக ஏற்படும் அச்சுறுத்தலை அவ்வளவு இலகுவாகப் புறக்கணித்துவிட முடியாது. எனவே உக்ரைன் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருவதன் மீது கவனம் செலுத்தப்படுவது அவசியம்.



# வடமராட்சியில் மீண்டும் கடற்படையின் பாஸ்?

யாழ்ப்பாணம்வடமராட்சி கடற்தொழிலாளர்கள் கடற்படையின் அனுமதி பெற்றே கடற்தொழிலுக்கு செல்ல வேண்டும் என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.

சுருக்கு வலை மீன்பிடி உள்ளிட்ட சட்டவிரோத தொழில்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் குற்ற செயல்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பிலான கலந்துரையாடல் புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அதன் போதே கடற்தொழில் அமைச்சர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் -

கடலில் நடைபெறும் சட்டவிரோத மீன் பிடிமுறைமைகள் உள்ளிட்டவற்றை ஏன் கடற்படையினர் கட்டுப்படுத்தவில்லை? நீரியல் வளத்திணைக்களமும் சட்டவிரோத கடற்தொழில் செய்வோருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க வில்லை என பல கடற்தொழிலாளர்கள் எம்மிடம் முறையிட்டுள்ளனர்.

கடற்படையினரின் அனுமதி பெற்று அவர்களின் கண்காணிப்புக்கள் மத்தியில் கடற்தொழிலுக்கு செல்லும் நடைமுறை முன்னர் இருந்தன. இது தொழிலார்களுக்கு தொல்லையாகவும் சுதந்திரமாக தொழில் செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாக மக்கள் தெரிவித்ததை அடுத்து, அந்த நடைமுறைகளைத் தளர்த்தினோம்.

தற்போது கடற்படையினரின் கண்காணிப்புகள், அனுமதி பெறவேண்டிய தேவை இல்லை என்பதால் பலர் சட்ட விரோத தொழில்களில் ஈடுபடுகின்றனர். அதனால் மீண்டும் கடற்படையின் அனுமதி பெற வேண்டும் என்பதை கட்டாயமாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்த நடைமுறையில் சாதக பாதகம் தொடர்பில் தொடர்ந்து ஆராய்ந்து அதனை தொடர்வதா? அல்லது சட்டவிரோத தொழிலைக் கட்டுப்படுத்த மாற்று நடவடிக்கை உண்டா என்பது தொடர்பில் ஆராயும் வரையில் கடற்படையின் அனுமதி பெற்றே தொழிலுக்கு செல்ல வேண்டும் எனத் தெரிவித்தார்.

# ஆலயங்கள் அழித்தொழிக்கப்படும்போது இந்தியா ஏன் மௌனமாக இருக்கின்றது?

## கலாநிதி ஆறு.திருமுருகன் கேள்வி

இலங்கை தொடர்பில் இந்தியாவுக்கு அக்கறை இருக்கின்றது என்றால் ஏன் இந்து ஆலயங்கள் அழித்தொழிக்கப்படும்போது மௌனமாக இருக்கிறீர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தத்தை பிரயோகியுங்கள் என அகில இலங்கை இந்துமா மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கில் ஆலயங்கள் இடித்தழிக்கப்படுகின்ற சம்பவங்கள் தொடர்பாக அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவரும் சிவபூமியின் அறக்கட்டளைத் தலைவருமான கலாநிதி ஆறு.திருமுருகன் கருத்துத் தெரிவிக்கின்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவிக்கையில் -



தமிழர் பகுதிகளிலுள்ள ஆலயங்கள் தெய்வ விக்கிரகங்கள் அழிக்கப்படுவது சேதமாக்கப்படுவது தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. இது மனவேதனை தருகின்ற விடையமாகும் குறிப்பாக சைவ மக்களுக்குத் தொடர்ந்து அதிர்ச்சியான செய்திகள் வந்த வண்ணமுள்ளன.

வெடுக்குநாறி மட்டுமன்றி கீரி மலையில் ஆதிச்சிவன்கோவில் இருந்த இடம் தெரியாது சிதைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து சைவ ஆலயங்களை தொல்லியல் திணைக் களம் அடையாளப்படுத்தி பௌத்த அடையாளங்களாக மாற்றிவருகின்றார்கள்.

இந்தவார அதிர்ச்சியான செய்தியாக வவுனியா வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயம் இடித்தழிப்பு முழு இந்து மக்களையும் சீற்றமடைய வைத்துள்ளது. இலங்கையின் ஜனாதிபதி இந்த விடையத்தில் உரிய நடவடிக்கை எடுத்து யார் இதனைச் செய்தார்கள் என்பதை அறிந்து உரிய தண்டணை வழங்க வேண்டும்.

இந்த நடவடிக்கைகளை சமாளிப்பார்கள் என்றால் தொடர்ந்து இத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறப்போகிறது என்ற சந்தேகமே எழுகின்றது. இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி உரிய தண்டணை வழங்கவேண்டும் இது இந்து மக்களுக்கு ஆறுதல் தரும் விடயமாக இருக்கும். சமீபத் தில் குறுந்தூர் மலை விவகாரத்தில் நீதித்துறையை மக்கள் நம்பி இருந்தார்கள்.

ஆனால் நீதித்துறை நடவடிக்கை எடுத்தும் பௌத்த விகாரை கட்டப்பட்டமை இலங்கையில் நீதி நியாயம் இல்லை என்பதை எடுத்துக்காட்டி நிற்கின்றது.

உலக அரங்கில் இலங்கை எத்தனையோ கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டிய நிலையில் பொருளாதாரத்தில் வழிமை இழந்து பிற நாடுகளை நம்பியுள்ள நிலையில் இத்தகைய அசம்பாவிதங்கள் மதங்களை இனங்களை தூண்டி மக்களுக்குள் குழப்பத்தை ஏற்படுத்துகின்ற நிகழ்ச்சி நிரலாக அமைந்துள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படவேண்டும். இடித்தழிக்கப்பட்ட ஆலயங்கள் உடனடியாக மீள்நிர்மாணம் செய்யப்பட்டு சைவமக்கள் வழிபடக்கூடிய வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பொலிஸார் இதற்குக் காவல் கடமையில் ஈடுபட்டு இத்தகைய சம்வங்கள் நடைபெறாது இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும். அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்ற மாவட்ட செயலாளர்கள் ஆளுநர்கள் இத்தகைய நடவடிக்கைகள் இனிமேல் இடம் பெறாத வகையிலும் ஆலயங்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

போர்க்காலத்தைக் காரணம் காட்டி பல ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டுள்ளன. சைவ மக்களின் வறுமையை அடையாளம் கண்டு மதமாற்றங்கள் இடம் பெற்றுள்ளன.

சைவ மக்கள் என்றுமில்லாத வகையில் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். சைவ மக்கள் விக்கிரகங்கள் ஏதாவது வைத்தால் அதற்கு அரசியல் சாயம் பூசுகிறார்கள் பிற மதங்களின் அடையாளச் சின்னங்கள் வைத்தால் அது தொடர்பில் எவரும் வாய் திறப்பதில்லை.

நாவற்குழியில் காங்கேசன்துறையில் தையிட்டியில் எத்தனையே பௌத்த விகாரைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. கேட்பார் கிடையாது சைவ மக்கள் தாங்கள் வசிக்கும் இடங்களில் ஏதாவது வைத்தால் விதண்டாவாதமும் கேள்விகளும் எழுகின்றன.

சமயத்தலைவர்களைப் பொறுத்த வரையில் யாரும் மதங்களுக்கு எதிரானவர்கள் அல்லர். சைவ மக்களுக்கு பிரச்சினைகள் வரும் போது ஒரு சில சைவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுக்கின்றார்கள். ஏனையவர்கள் பேசாதிருக்கின்றார்கள் கிறிஸ்தவர்களுக்கு பிரச்சினை என்றால் கிறிஸ்தவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவர் இருவர் குரல் கொடுக்கின்றார்கள். ஆனால் ஒட்டு மொத்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருமித்து குரல் கொடுப்பதில்லை.

மதங்களுக்கு இடையில் பிரச்சினைகள் ஏற்படுகின்றுபோது அதனைத் தீர்த்து வைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருமித்துக் குரல் கொடுப்பதில்லை. இது கவலையான விடயமா கும். ஆலயங்கள் சேதமாக்கப்படுகின்றபோது இடித்தழிக்கும் போது குரல் கொடுப்பதும் ஊர்வலங்கள் செய்வதும் ஏற்புடையதல்ல. அவை இனி இடம்பெறாது இருப்பதற்கான நடவடிக்கைகள் ஒருமித்து எடுக்கப்படவேண்டும்.

ஆணித்தரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் மணித்தியாலக்கணக்கில் பேசிப் பிரயோசம் இல்லை. இத்தகைய நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதற்கு ஏற்ற வகையில் நாடாளுமன்றத்தில் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபடவேண்டும்.

சத்தியவழியில் இதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுங்கள். நீங்கள் ஒற்றுமை இல்லாத நிலையில் காணப்படுகின்றீர்கள். இனியா வது இதனைக் கைவிட்டு இத்தகைய நடவடிக்கைகள் இடம் பெறாத வகையில் ஒருமித்து செயற்படுங்கள். இலங்கையில் எத்தனையோ ஆதிசிவன் கோவில்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதன் வலியை தற்போது இலங்கை அரசாங்கம் உணர்ந்துகொண்டிருக்கின்றது.

இனியும் ஆலயங்கள் இடித்தழிக்கப்படுமேயானால் இந்த நாடு வறுமையையும் துன்பத்தையும் சந்திக்கப் போகும் இதிலிருந்து தப்புவதற்கு நீதி தேவன் நிமிர்ந்து நிற்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த விடயத்தில் இந்திய அரசாங்கம் மௌனம் காக்கக்கூடாது. இந்திய அரசாங்கம் இலங்கை விடயத்தில் அக்கறை இருப்பதென்றால் இந்த விடயத்தில் ஏன் மௌமாக இருக்கின்றீர்கள் என்பதை உங்களிடமும் கேட்டுக் கொள்கின்றேன். என்றார்.

# ‘புன்னைக்குடா வீதி’யின் பெயர்மாற்ற விவகாரம்: ஏறாவூர் பள்ளிவாசல் சாணக்கியனுக்குக் கடிதம்

இன ஐக்கியத்தை சீர்குலைக்கும் கிழக்கு மாகாண ஆளுநரின் நடவடிக்கைகளை நிறுத்த குரல் கொடுக்குமாறு கோரி ஏறாவூரில் உள்ள மஸ்ஜிதுர் றிபாய் பள்ளிவாசல் நிர்வாகம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் இராசபுத்திரன் சாணக்கியனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு-

புன்னைக்குடா வீதிக்கு ‘எல்மிஸ்வால்கம’என்னும்புதிய பெயர் பலநூறு ஆண்டுகாலமாக இருந்து வருகிறது.

ஏறாவூர் நகரம், ஏறாவூர்ப்பற்று ஆகிய இரண்டு உள்ளூராட்சி அதிகாரத்துக்கும், இரு பிரதேச செயலகங்களின் நிர்வாக எல்லைகளுக்கும் உட்பட்ட ‘புன்னைக்குடா வீதி’ என்ற பெயருடன் பயன்படுத்தப்படும் இந்த வீதி ஏறாவூர் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள மணிக்கூண்டுக் கோபுர சந்தியில் ஆரம்பித்து, சுமார் 5.23 கிலோ மீற்றர் நீண்டு சென்று புன்னைக்குடா கடற்கரையில் முடிவடைகிறது.

இந்த வீதி அமைந்துள்ள பிரதேசம் முழுவதிலும் 99 சதவீதமாக தமிழ், முஸ்லிம் மக்களே நிறைந்து வாழ்கின்றனர். இவ்வீதிக்கு பெயரிடக்கூடியஎத்தனையோ தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள் இந்தப்பிரதேசத்தில் வாழ்ந்து மறைந்த போதிலும், இதில் யாரேனும் ஒரு தனிநபரின் பெயரை சூட்டுவதன் மூலம் ஓர் இன மக்கள் மனம் நொந்து கொள்வார்கள் என்பதால் பொதுவாக ‘புன்னைக்குடா வீதி’ என்ற பெயரையே இப்பகுதி மக்கள் மன நிறைவுடன் மிக நீண்ட காலமாகவே பயன்படுத்தி வரு கின்றனர்.

இலங்கையின் வரைபடத்திலும் ஆங்கிலேயர் ஆட்சிக்கால காணி உறுதிகளிலும் இவ்வீதி புன்னைக்குடா வீதி என்ற பெயரிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் தென் பகுதியைச் சேர்ந்த சுனில் ஆரியபால என்பவரின் தலைமையில் சிலர் ஒப்பமிட்டு கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றின் மூலம் மிகப் பழைமை வாய்ந்த ‘புன்னைக்குடா வீதி’யை ‘எல்மிஸ் வால்கம’ என பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநரும் இதனைக் கவனத்தில் கொண்டு சில தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் எனவும் அறிய முடிகிறது. ஆளுநரின் செயற்பாட்டை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எனவே, தயவுசெய்து தாங்கள் இந்த விடயத்தில் கரிசனை செலுத்தி, இந்தப் பகுதியில் இன நல்லுறவுக்கு குந்தகம்ஏற்படுத்தும்இவ்வீதிப் பெயர்மாற்ற நடவடிக்கைகளைதடுத்துநிறுத்தி, தொடர்ந்தும் ‘புன்னைக்குடா வீதி’ என்னும் பெயரிலேயே இவ்வீதி அழைக்கப்படவும், சகலஇனமக்களின்நல்லுறவு பேணப்படவும் வழிசமைக்குமாறு தயவாக கேட்டுக்கொள்கின்றோம். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொருளாதார முன்னேற்றத்தின் பயனை விலை குறைப்பு ஊடாக வழங்குவோம்

## பதில் போக்குவரத்து அமைச்சர் உத்தரவாதம்

கொழும்பு, மார்ச் 31

எரிபொருள் விலைக் குறைப்புக்கு அமைய ஏனைய பொது போக்குவரத்து சேவைத்துறைகளின் கட்டணமும் குறைக்கப்பட வேண்டும் என உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளோம். பொருளாதார முன்னேற்றத்தின் பயனை நாட்டு மக்களுக்கு விலை குறைப்பு ஊடாக வழங்குவோம் என பதில் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில்இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

எரிபொருள் விலை குறைக்கப்பட்டதன் நிவாரணத்தை அனைத்து சேவை கட்டமைப்பு ஊடாகவும் நாட்டு மக்களுக்கு 24 மணித்தியாலங்களுக்குள் வழங்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட ஆலோசனை வழங்கினார். அதற்கமையவே பஸ் கட்டணம் குறுகிய நேரத்திற்குள் திருத்தம் செய்யப்பட்டது.

பஸ் கட்டண திருத்த கொள்கைக்கு அமைய எதிர்வரும் ஜுன்மாதம் முதலாம் திகதி பஸ் கட்டணம் திருத்தம் செய்யப்படும், இதன்போது எரிபொருள் விலை மற்றும் ஏனைய காரணிகளை கருத்திற் கொண்டு பஸ் கட்டணத்தை நாட்டு மக்களுக்கு ஏற்றாட்போல் குறைக்க எதிர்பார்த்துள்ளோம்.

எரிபொருள் விலை குறைப்புக்குஅமையஏனைய பொதுபோக்குவரத்துசேவைத் துறைகளின் கட்டணமும் குறைக்கப்பட வேண்டும் என உரிய தரப்பினரிடம் வலியுறுத்தியுள்ளோம். பாடசாலை பஸ், வான், ஓட்டோக்கள் உள்ளிட்ட போக்குவரத்து சேவை கட்டணம் நிச்சயம் குறைக்கப்பட வேண்டும்.

ரயில் கட்டணத்தை மறுசீரமைப்பது தொடர்பில் கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்க வேண்டும். ரயில் சேவைக்கான எரிபொருள் செலவுக்கும், கிடைக்கும் வருமானத்துக்கும் இடையில் பாரிய பற்றாக்குறை காணப்படுகிறது. ஆகவே, ரயில் கட்டணம் தொடர்பில் கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

பொருளாதார முன்னேற்றத்தின் பயனை நாட்டு மக்களுக்கு விலை குறைப்பு ஊடாக வழங்குவோம். சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கினால் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து வெகுவிரைவில் மீள முடியும். - என்றார்.






# பெரேராவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி இறுதி அஞ்சலி

மூத்த அரசியல்வாதியும், இலங்கை நாடாளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகரும், அமைச்சரவை அமைச்சருமான மறைந்த ஜோசப் மைக்கல் பெரேராவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (30) இறுதி அஞ்சலி செலுத்தினார்.

நேற்று, அவரது பூதவுடல் தாங்கிய விசேட வாகனம், பொலிஸ் வாகனத் தொடரணியுடன் நாடாளுமன்ற வளாகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

நாடாளுமன்றத்தின் பிரதான நுழைவாயில் அருகே பூதவுடல் கொண்டு வரப்பட்ட பின்னர், செங்கம்பளத்தின் ஊடாக நாடாளுமன்ற கட்டடத்துக்கு முன்னால் உள்ள மண்டபத்தில் அமைந்துள்ளவிசேடவைபவ மண்டபத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பின்னர் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க மற்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோர் மலர் வலயங்களை வைத்து அவரது பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், முன்னாள் சபாநாயகர்கள், அமைச்சர்கள், ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற பொதுச் செயலாளர், படைக்கள சேவிதர், தூதுவர்கள் உட்பட நாடாளுமன்றத்தின் அனைத்து ஊழியர்களும் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

முற்பகல் 9 மணியளவில் நாடாளுமன்ற வளாகத்துக்குக்கொண்டுவரப்பட்ட முன்னாள் சபாநாயகரின் பூதவுடல் 10 மணி வரை நாடாளுமன்ற விசேட வைபவ மண்டபத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன விசேட அதிதிகளின் ஞாபகார்த்த புத்தகத்தில் குறிப்பொன்றை இட்டதையடுத்து ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் நினைவுக் குறிப்புகளை இட்டனர்.

1941 செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி பிறந்த ஜோசப் மைக்கேல் பெரேரா, 2001 டிசம்பர் 19 முதல் 2004 பெப்ரவரி 07 வரை இலங்கை நாடாளுமன்றத்தின் 17 ஆவது சபாநாயகராகப் பணியாற்றினார்.

1967 - 1970 காலகட்டத்தில் ஜா - எல நகர சபையின் உப தவிசாளராகவும், 1970 - 1971 இல் ஜா - எல நகர சபையின் தவிசாளராகவும் அவர் பணியாற்றினார்.

1971 முதல் 1976 வரை எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவாகவும், 1978 - 1988 வரை நாடாளுமன்ற உறுப்பினராகவும் அவர் பணியாற்றினார்.

மறைந்த ஜோசப் மைக்கல் பெரேரா, 1989 முதல் 2015 வரை உள்நாட்டலுவல்கள் அமைச்சர், தொழிலாளர் அமைச்சர், மீன்பிடி அமைச்சர் உள்ளிட்ட பல அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளார்.

# எரிபொருள் விலை குறைக்கப்பட்ட போதிலும் பேக்கரி பொருள்களின் விலை குறையாதாம்

## உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

எரிபொருள் விலை குறைக்கப்பட்ட போதிலும் இந்த தருணத்தில் பேக்கரி பொருள்களின் விலைகளை குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேக்கரி பொருள்களின் விலைகளை திருத்தும் அளவுக்கு எரிபொருள் விலை குறைப்பு கணிசமானதாக இல்லை என பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

## மிகவும் சூட்சுமமான முறையில்

# ஹெரோயின் விற்பனை: சிக்கிய குடும்பப் பெண்

மினுவாங்கொடைப் பிரதேசத்தில் மிகவும் சூட்சுமமான முறையில் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்து வந்த 47 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாயார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மினுவாங்கொடைப் பொலிஸ்நிலையத்தின்ஊழல் ஒழிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உபபொலிஸ்பரிசோதகர் நிபுண கருணாரத்னவுக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் பேரில் குறித்த சந்தேக நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரான மேற்படி குடும்பப் பெண் ஹெரோயின் போதைப் பொருளை சிறிய பைக்கற்றுக் களில் அடைத்து மினுவாங்கொடை, பன்சில்கொட மற்றும் கலவான ஆகிய பிரதேசங்களில் மிகவும் சூட்சுமமான முறையில் விற்பனை செய்து வருகின்றார் என்று பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.


சந்தேகநபர் தனது வீட்டில் வைத்து இளைஞர் ஒருவருக்குக் ஹெரோயின் போதைப்பொருள் அடைக்கப்பட்ட பைக்கற் ஒன்றை 1500/= ரூபாவுக்கு விற்பனை செய்து கொண்டிருக்கும் போதே பொலிஸாரிடம் சிக்கியுள்ளார்.

# தமிழ் - சிங்கள புதுவருடத்தை ஒட்டி விசேட பஸ் சேவைகள்

தமிழ் - சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 08 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இந்த பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன், குறித்த காலப்பகுதியில் பகல் மற்றும் இரவு வேளைகளில் நெடுந்தூர பஸ் சேவைகளை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி சில்வா தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம்

## பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi





- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

- Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
- Chiken Fried Rice with Vegetable - 1100/=
- Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**


| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்



# யோகர் சுவாமிகள்

யோகர் சுவாமி 1872ல் மாவிட்டபுரத்தில் அவதரித்தார். தந்தை அம்பலவாணர், தாய் சின்னாச்சியம்மை. தாய் இளவயதில் இறந்த பின் தமது சித்தப்பாவுடன் கொழும்புத்துறையில் வளர்ந்தார். முதலில் தமிழ்ப்பாடசாலையிலும் பின் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் படித்தார். நீர்ப்பாசன திணைக்களத்தில் கிளிநொச்சியில் பண்டகக் காப்பாளராக கடமையாற்றினார். ஓய்வு வேளைகளில் தியானம் செய்வார். தமிழ் மற்றும் சமஸ்கிருத பாசுரங்களை மனனம் பண்ணினார். 1897 ல் சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பிரசங்கத்திற்கு சென்றிருந்தார். ÷நேரம் குறுகியது சொல்ல வேண்டிய விடயமோ மிகப் பெரியது' என சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டார். அவரின் பிரசங்கம் யோகரின் ஆத்ம தாகத்தை அதிகரித்தது. கொழும்புத் துறையில் வதியும் நாட்களில் அவருக்கு செல்லப்பா சுவாமியின் தொடர்பு ஏற்பட்டு நாளடைவில் அவரே யோகருக்கு குருநாதராய் அமைந்தார். செல்லப்பா சுவாமிகள் 'விசரன்' வேடம் தாங்கி நல்லூர்த் தேரடியில் நின்றிருந்தார்.

செல்லப்பரின் நான்கு மகா வாக்கியங்கள் 'எப்பவோ முடிந்த காரியம், ஒரு பொல்லாப்பும் இல்லை, முழுவதும் உண்மை, நாம் அறியோம்'.

செல்லப்பா சுவாமிகள் யோகருக்கு பங்குனி மாதம் இரண்டாம் திங்களன்று நல்லூர் தேரடியில் திருவடித் தீட்சை செய்தார். யோகர் சுவாமிகளின் மகாசமாதியும் பங்குனி மாதம் 2ம் திங்களில் (1964 பங்குனி) நடைபெற்றது. இதனால் செல்லப்பா சுவாமிகள் தன் ஞானப்புதல்வனை தானாகச் செய்து விட்டார். குருநாதரின் பணிப்பின் படி கொழும்புத்துறைச் சந்தியில் நின்ற இலுப்பை மர வேரில் இருந்தார். செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிகளை இடைக்கிடை வந்து பார்த்துபயிற்சி செய்தார். இவ்வாறு ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகள் அவர் முதல் சந்திப்பின் பின்பு யோகருக்கு ஞானத்தை பயிற்றினார்.

யோகர் தூய வெள்ளை வேட்டி உடுத்து தோளில் உத்தரியம் இட்டு கமக்கட்டில் குடை இருக்கும். தலை மயிரை நன்றாக சீவி முடித்து யாழ்ப் பாணத்து சந்தி, தெருக்கள், சந்தை, கடைகள் எங்கும் திரிந்தார். கஸ்தூரி யாரின் மருந்து மணம் கமழும் இல்லத்திலும் சுன்னாகம் செல்லாச்சியம்மையார் ஆச்சிரமத்திலும் சேர் இராமநாதன் நிறுவிய திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி (தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் சைவப் பெரியார் திருநிலையம் பரிபா லித்து வந்த மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் ஈசானசிவன் என்னும் நாமம் சூடிய திக்கம் செல்லையா அவர்கள் பரிபாலித்த கந்தவனக் கடவையிலும் சிறு சிறு பொழுது தரித்திருந்தார். மேலும் கொழும்பு மாநகரம், கண்டி, நாவலப்பிட்டி, தியத்தலாவை, அப்புத்தளை போன்ற இடங்களிலும் அன்பரைச்; சந்தித்தார். கொழும்புத்துறை துரையப்பா அவர்கள் சுவாமிகள் முன்பு கற்பூரம் ஏற்றி பண்ணிசை பாடினார். ஆச்சிரமத்தில் சாயங்காலங்களில் நியமமாகச் சிவபுராணம் ஓதப்பெற்றது. பல நூலறிவாளர் கூடியிருக்கும் சமயங்களில் விவேக சூடாமணி, பகவத்கீதை நூல்களும் வாசிக்கப் பெற்றன.

சுவாமிகளின் திருக்கூட்டத்தில் பிரம்மஸ்ரீ கணேசையர், சோமசுந்தரப் புலவர், கலைப் புலவர் நவரத்தினம், அளவெட்டி மயில்வாகன ஆசிரியர், தினகரன் உதவி ஆசிரியர் வித்துவான் க.கி.நடராசன் ஆகியோர் இருந்தும் சுவாமிகள் ஒரு திலக கோட்டைத் தொடரவேண்டுமென்று திருவுளம் கொண்டு பல்லவரயார் (1935 சனவரி) சிவதொண்டர் என்றும் பத்திரிகை வித்துவான் க.கி.நடராசா ஆசிரியராக கொண்டு அவரது கமலாசனி அச்சுக் கூடத்தில் வெளியாகியது. (தாரகம் இந்தச் சிவதொண்டன் இதழ் இன்று வரைக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகிறது.)

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன் என்னும் சுவாமிகள் 1954ல் 434, காங்கேசன்துறை வீதியில் சிவதொண்டன் நிலையத்தை நிறுவினார் இதுவும் கலாசாலையாகும் மௌனமாயிருந்து இளைப்பாறுவதற்கான திருவடி வீற்றிருக்கும் தியானமண்டபம் (மேல் மாடி) கீழே தோத் திரப்படிப்பு திருமுறை ஓதல் மற் றும் சிவராத்திரியன்று நான்கு யாமப் பூசைகள் ஆங்கில மாத முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் யாகம் நடைபெறும். யோகர் சுவாமியாரின் திருவடிக் கலப்புக்குப் பின் மாதந்தோறும் ஆயிலியபூசை இதேபோன்று மட்டக்களப்பு செங்கலடியிலும் சிவதொண்டர் நிலையம் இயங்குகிறது. யோகசுவாமியார் மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்குவதற்காக வன்னிக்குச் சென்று கமஞ் செய்யுமாறு அடியார்களை ஊக்குவித்த இதே முறையில் தான் மட்டக்களப்பு செங்கலடியிலும் சிவதொண்டன் பண்ணை இயங்குகின்றது. யோகர்சுவாமியால் அருளப்பட்ட கீர்த்தனைகள், பாக்கள் மற்றும் கடிதங்கள் நற் சிந்தனையாக பல பதிப்புக்கள் கண்டு வெளியாகியுள்ளது. யோகர்சுவாமியின் தெய்வீகபோதனைகளை அவர் பாடிய பாடல்களிலும் கடிதங்களிலும் காணலாம். அவற்றை நற்சிந்தனை என்ற புத்தகத்தில் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. சந்தசுவாமிகள் நற்சிந்தனைப் புத்தகத்தின் இரண்டாம் பதிப்பை ஆங்கிலத்தில் “Songs and Sayings of Yogaswami” என்ற தலைப் பில் மொழிபெயர்த்தார். மூன்றாம் பதிப்பை Natchinthanai-Songs and Sayings of Yogaswami என்ற தலைப்பிலும் மொழிபெயர்த்தார்.

இந்த தெய்வீகமாக உருவாக்கப்பட்ட நற்சிந்தனை என்ற புத்தகத்தை இப்பொழுது இலங்கை வடமாகாணம் இந்து சமய கல்வி திட்டத்தில் ஒரு பகுதியாக சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இது இளம் மாணவர்களை நல்ல சிந்தனைகளைப் புரிந்து கொள்வதற்கு ஊக்குவிக்கிறது. நற்சிந்தனை புத்தகம் இலங்கை தேசிய பாடத்தில் சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

யோகர் சுவாமிகளின் 3 சீடர்கள் மார்க்கண்டு சுவாமி – கைதடி ஆச்சிரமம், சுப்பிரமுனிய சுவாமி – ஹவாய் ஆதீனம், சந்த சுவாமி (இலங்கையின் கவர்னர் ஜெனரலான சோல்பெரி பிரபுவின் மகன் James Ramsbotham)

சுவாமிகளின் அணுக்கத்தொண்டர்கள் இலங்கையில் பல பாகங்களிலும் இருந்தனர். அவர்களுக்கு சாதி சமய வேறுபாடு இல்லை. அவர்களுக்கு தம்மை நாடி வந்தோரின் மனத்துயரங்கள் தம் அகத்திற் பளிங்குபோல் பிரதிபலிக்க அத்துயரங்களைப் போக்கும் நன்மருந்தான திருவாய்மொழிகளைப் பாட்டிலும் வசனங்களிலும் அருளினார். இவற்றைப் பெற்ற அன்பர்கள் அதனைப் பக்குவமாகப் பேணிசுகம் பெற்றனர்.

அவர் ஒரு உலககுரு அவரின் தத்துவம் சுருக்கமாகக் கூறி இதனை நிறைவு செயலாம். நாம் பரிசுத்தராயும் தெய்வத்துள் வைக்கப்பட்டவராயும் உள்ளோம். இது நமது உண்மைச் சுபாவம்.

நமக்குள் ஒருவித மாறுபாடும் இல்லை. சாதி சமய பேதமாகிய எதுவும் நம்மைச் சின்னா பின்னப்படுத்துவதுமில்லை. நாம் மண்ணிற் பிறந்தும் வாழ்ந்ததுமாகிய இவ்வுலகம் ஓர் இந்திரசாலம், கனவு, செப்படிவித்தை காமக்குரோதமோகக் கடலைக் கடத்தல் அரியகாரியம் தர்மநெறி பிசகாமை என்பது தருமசாத்திரங்களில் சொல்லப்பட்ட அதர்மகாரியங்களிலிருந்து விலகி இருக்கவேண்டும். எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று எமது வாழ்வை நடாத்துவோம். எம்மை இறைவனிடம் முற்றுமுழுதாக ஒப்புவிப்போம்.

# எம்மை வழி நடத்தும் சிவயோக சுவாமிகள்

பாரதம் என்பது இன்றைய இந்தியாவை மட்டுமன்றி தெற்காசியாவை குறிப்பதாகவே எம் புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது .

அத்தகு பாரத தேசத்தை ஞானபூமி என்றும் கர்ம பூமி என்றும் எம் ஆன்றோர்கள் போற்றி மகிழ்ந்தனர்.

எனவே இந்த மண்ணில் காலத்திற்கு காலம் அருளாளர்கள் அவதரிப்பது இயல்பானது. ஆயினும், அவர்களை ஞான நாட்டம் உள்ளோரே புரிந்து கொண்டனர்.

அண்மைக்காலத்தில் தோன்றிய ரமண மகரிஷி ஆகட்டும் யாழ்ப்பாணத்து சிவயோகர் ஆகட்டும் அவர்கள் இத்தகு அருளாளர்களுக்கு நல் உதாரணம் ஆவர்.

இவர் மரபில் வைதிக சைவர். ஆனால், சமயாதீதராகவும் தத்துவாதீதராகவும் திகழ்ந்தவர்.

1872 மே மாதம் 29 ஆம் திகதி (ஆங்கீரச வைகாசி அவிட்ட நக்ஷத்திரம்  மாவிட்டபுரத்தில் அவதரித்த யோகர் 1897ல் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சுவாமி விவேகானந்தரை தரிசித்தார்.

திருமுறைகளையும் திருக்குறளையும் நன்கு கற்ற இவர் உபநிடதங்களிலும் பகவத்கீதையிலும் சங்கர பாஷ்யத்திலும் ஆழுங்காற்பட்டு காணப்பட்டார். தவிரவும் பிற சமய நூல்களான பைபிள் முதலியவும் கற்பதில் ஆர்வமுடையவராக இருந்ததாக அறியக்கிடக்கிறது.

இவரது ஞான தாகம் நல்லூர் தேரடியில் விசர்க் கோலம் கொண்டு காட்சி தந்த செல்லப்ப தேசிகரை குருவாகக் கொள்ளச் செய்தது.

தன் தவ வாழ்வின் ஆரம்பத்தில் உன்மத்தர் போல காட்சி தந்த யோகர் பிறகு ஆங்கொரு குடிசையில் தங்கியிருந்தார்.

காலகதியில் அன்பர்கள் பலரும் அங்கு குழுமினர். அவரும் அழகிய தவ கோலராக காட்சி தரலானார். மோனமுடி தரித்து ராஜாங்க சைவத்தின் சின்னமாகத் தோன்றினார்.

அவர் தம் குடிசையில் இருப்பதோடு நின்று விடாமல் நாடெங்கும் சென்று அன்பர்களை வளர்த்தார். பலரை திருத்தி ஆட்கொண்டார்.  இயல்பாக அதிசயங்களைச் செய்தார்.

தன் அடியார் திருக்கூட்டத்தை கொண்டு சிவத் தொண்டர் நிலையத்தை ஞான சாதனை பயிலும் நிலையமாக உருவாக்கினார். சிவதொண்டன் என்ற ஏட்டை தொடங்கினார்.

திருவடி வழிபாடு, பாத யாத்திரை , பஜனை என்ற மரபு வழியில் அடியார்களை ஆற்றுப்படுத்திய யோகர் சுவாமிகள் வேத சிவாகம வழிபாட்டிலும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

ஆகம முறை கோயில் வழிபாடுகளை ஆற்றுவதன் முக்கியத்துவத்தையும் தன் அன்பர்களுக்கு வலியுறுத்தினார். ஆகமங்களில் குறிப்பிடப்படும் அபிகே ஆராதனைகளை சுவாமிகள் பெரிதும் போற்றியிருக்கிறார்.  அதை செய்ய தூண்டியுமிருக்கிறார்.

யோகர் எழுதிய பாடல்கள் நற்சிந்தனை என்று தொகுக்கப்பட்டிருக்கின்றன. அவரது அருள் மொழிகள் எங்கள் ஆசான் அருள்மொழிகள் என்று தொகுக்கப்பட்டுள்ளன.

அது போலவே யோகர் சுவாமிகள் பலப்பல அற்புதங்களைச் செய்தவர். ஆனால், நிகழ்ந்தவை இவற்றுக்கும் தமக்கு சம்பந்தம் இல்லாதது போல இருக்கும் இயல்புடையவர்.

ஆன்மா நித்யம் ஆன பொருளென
ஆசான் சொல்லக் கேட்டிருந்தோம்
அதையே மறந்தோம் பிறந்தோம் இனிநாம்
அதுவே நாமென எண்ணிடுவோம்

என்பது ஒரு நற்சிந்தனைப்பாடல். ஓதுக அது நாம் ஓம் தத் சத் ஓம் என்று பல இடங்களில் பாடியிருக்கிறார்.

சைவத்திருமுறைகளில் பெரிதும் ஈடுபாட்டையவர் யோகர் சுவாமிகள்.  பலரையும் பாட வைத்து தாமும் உள்ளம் உருகி பாடும் இயல்புடையவர்.

ஒரு பொல்லாப்பும் இல்லை, முழுதுமுண்மை, எப்பவோ முடிந்த காரியம், நாமறியோம் என்ற மகா வாக்கியங்களை ஓயாது சொல்லிக் கொண்டிருந்தார்.

இந்த மகா யோகி குறித்து நாமறிந்தவை சிலவே. அறியாதவை பல. அவரை சிந்தித்து வந்திப்போரை இப்போதும் அவர் வழிநடத்துகிறார். பங்குனி ஆயில்யம் யோக மாமுனிவரின் குருபூஜைத் தினமாகும்.

யுக தர்ம ப்ரவர்தக குப்த நரம்
க்ருத பக்தி விகாஸன விச்வஹிதம்/
ஜித காஞ்சன காம ப்ரபஞ்ச ஹரம்
ப்ரணமாமி யோகாசார்ய சிவம்//

சுப வீணாகான புர ஸந்நிஹிதம்
சிசு சௌம்ய மகம்ய ப்ரணம்ய வரம்/
தவ ராஜ ஸுவிசால ஸமுத்ர மயம்
ப்ரணமாமி யோகாசார்ய சிவம்//

அக மோசன துஷ்க்ருத முக்தி கரம்
சிவ ண்முக ஜோதி யோக மயம்/
ஸுக மங்கள ஸத்குண விநோத குரும்
ப்ரணமாமி யோகாசார்ய சிவம்//

யுகத்திற்கேற்ப தர்மத்தை அறிவிப்பதற்காக மனித வடிவில் மறைந்திருப்பவர், பக்தி எழுச்சி ஏற்படுத்தி உலக நன்மையுண்டாக்கியவர், காமம், பொன் ஆகிய உலக மயக்கத்தை வென்றவர் அத்தகைய யோக மாமுனிவராகிய ஆசார்யரான சிவ வடிவினரை வணங்குகிறேன்.

மங்களகரமான யாழ்ப்பாண நகரில் எப்பொழுதும் உள்ளவர், குழந்தை போன்ற தோற்றமும் செயலும் மனமும் உடையவர், எளிதில் அடைய முடியாதவர், வணக்கத்திற்குரியவர், தவத்தில் அரசராக திகழ்பவர், பரந்த கடல் போன்றவர், அத்தகைய யோக மாமுனிவராகிய ஆசார்யரான சிவ வடிவினரை வணங்குகிறேன்.

பாவத்தைப் போக்குபவர், கெடுதல் தரும் நிகழ்வுகளை தடுப்பவர், சிவ ண்முக ஜோதி வடிவமாக நல்லூர் கந்தனின் அருள் மிகப் பெற்ற யோகியாகத் திகழ்பவர், சுகத்தையும் மங்களமான சத்குணங்களையும் கொண்ட விநோதமான குருவாக விளங்குபவர், அத்தகைய யோக மாமுனிவராகிய ஆசார்யரான சிவ வடிவினரை வணங்குகிறேன்.

**- நீர்வை. சிவஸ்ரீ.**
**தி. மயூரகிரி சிவாச்சார்யார் -**

# பழைய இரும்பு சேகரிப்பு, சட்டவிரோத மணல் கடத்தல் போதைப்பொருள் கடத்தலுக்கு இவர்களே காரணர்கள்

## பிரதேச செயலர்கள் சுட்டிக்காட்டு



யாழ்.மாவட்டத்தில் பழைய இரும்பு சேகரிப்பவர்களாலும் சட்டவிரோதமாக மணலைக் கொண்டு செல்பவர்களாலும் போதைப்பொருள்கடத்தல்மற்றும் பரிமாற்றம் இடம்பெறுகின்றது இவற்றுக்கு எதிராக உரிய கண் காணிப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என பிரதேச செயலர்களால் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் குற்றச் செயலைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்டஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே பிரதேச செயலாளர்கள் தமது பிரிவுகளிலுள்ள குற்றச் செயல்கள் தொடர்பாக எடுத்துக்கூறியபோதே இதனைத் தெரிவித்தார்கள்.

அவர்கள் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

குற்றச் செயல்கள் கட்டுப் படுத்துவது தொடர்பில் இம்மாதம் ஆரம்பத்தில் கலந்துரையாடிய பின்னர் ஓரளவுக்கு பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப் படவுண்டும் அது மட்டுமன்றி பிரதான வீதிகளை மாத்திரம் கண்காணிக்காது மக்கள் நடமாட்ட கூடிய இடங்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளிலும் ரோந்து நடவடிக்கைகள் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும்.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் அவதானிக்கும் போது பழைய இரும்பு சேகரிப்பவர்கள் மற்றும் சட்ட விரோதமாக மண் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களின் மீதும் அதிகளவான கண்காணிப்பு மற்றும் சோதனைகளை மேற்கொள்ளவேண்டும்.

இவர்கள் ஊடாக போதைப் பொருள் கடத்தப்படும் அதே நேரத்தில் போதைப்பொருள் பரிமாற்றமும் இடம்பெற்று வருவதாக பொதுமக்களால் முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களின் மீது உரிய சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்

மேலும் தீவகப் பகுதிகளில் மண்டைதீவு மற்றும் புங்குடுதீவுப் பகுதிகளில் தொடர்ச்சியாக சோதனைகள் மேற்கொள்ளப் படவேண்டும். இங்கு தீவகப்பகுதியில் காணப்படுகின்ற கால் நடைகள் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்டு அவை இறைச்சிக்காக பயன்படுத்துவதற்கு புங்குடு தீவில் இருந்து கடலால் கடத்தப் பட்டு யாழ்நகர் கொண்டுசெல்லப் படுகின்றது.

எனவே புங்குடுதீவில் விசேட சோதனை நடவடிக்கையையும் அதேபோன்று மண்டைதீவுச்சந்தியிலும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இந்தப் பகுதிகளில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் தொடர்ச்சியானசோதனைநடவடிக்கைகள் மூலம் தான் கால் நடை மற்றும் போதைப்பொருள்கள் கடத்தப்படுவது பரிமாற்றப் படுவதை ஓரளவேனும் கட்டுப் படுத்தமுடியும்.

எனவே இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி குற்றச் செயல் மற்றும் போதைப் பொருட் கடத்தலை கட்டுப்படுத்த வேண்டும் எனக் கேரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கலந்தரையாடலில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேசசெயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், கடற்றொழில் பிரதிநிதிகள், முப்படையின் பிரதானிகள் கலந்து கொண்டார்கள்.

# கூட்டுறவு மூலமாக கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்து தருவதில் பற்றுறுதியுடன் உள்ளோம்

## தலைமை கூட்டுறவு உத்தியோகத்தர் பரீட்சை உறுதி

(த. தர்மேந்திரா)

கூட்டுறவு துறை மூலமாக கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்திசெய்து தருவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் பற்றுறுதியுடன் செயற்படுகின்றது என்று அம்பாறை மாவட்டத்தின் கூட்டுறவு தலைமை உத்தியோகத்தர் எம். ஐ. எம். பரீட் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசத்தால் வீரமுனை ஐங்கரன் கிராமிய மகளிர் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் 05 உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு தையல் இயந்திரம் மானிய அடிப்படையில் வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

சங்கத்தின் தலைவி வித்தகர் எஸ். யு. செலியா தலைமையில் வீரமுனையில் இடம்பெற்ற சம்பிரதாயபூர்வ கையளிப்பு வைபவத்தில் சமாச தலைவர் எஸ். லோகநாதன், சமாசத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். இராமகிருஷ்ணன், சங்கத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். இராஜசேகர் அடங்கலான பேராளர்கள் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்து பிரதம விருதினர் உரையாற்றியபோது பரீட் தெரிவித்தவை வருமாறு:

கூட்டுறவு துறை மூலமாக கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொடுப்பதே கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் இலட்சிய நோக்கம் ஆகும்.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொடுக்கின்ற வேலை திட்டங்களுக்கு உதவி, ஒத்தாசை, வழிகாட்டல் வழங்குவதற்கு எப்போதும் தயாராகவே உள்ளனர்.

நாடு இன்று பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டு உள்ளது. இதனால் சுய தொழில் மற்றும் கைத்தொழில் முயற்சிகள் மூலமாக மேலதிக வருமானத்தை ஈட்டி வாழ்வாதாரத்தை கிராமிய மக்கள் சரி செய்ய வேண்டி உள்ளது

. அந்த வகையில் சமாசத்தால் வீரமுனை ஐங்கரன் கிராமிய மகளிர் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்படுகின்றன. இவ்வாறான உதவிகள் மூலம் பயனாளிகளின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும். அதே நேரம் துஷ்பிரயோகங்கள் இடம்பெறகூடாது

சமாச தலைவர் எஸ். லோகநாதன் பேசியபோது இந்த வருடம் சமாசம் மேற்கொண்டு உள்ள முதலாவது வாழ்வாதார மேம்பாட்டு திட்டம் இதுவே ஆகும், புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் எமது வேலை திட்டங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கி வருகின்றனர், அந்த வகையில் தையல் இயந்திரங்களை வாங்குவதற்கு தனிப்பட்ட வகையில் நிதி பங்களிப்புகளை வழங்கிய புலம்பெயர் தமிழ் உணர்வாளர்களுக்கு இத்தருணத்தில் நன்றிகளை தெரிவிக்கிறேன் என்றார்.








## சாய்ந்தமருதில் 3 உணவகங்களுக்கு நீதிமன்றத்தால் தண்டம் விதிப்பு





சாய்ந்தமருதில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகள் கைப்பற்றப்பட்டுள்ளதை தொடர்ந்து, 3 உணவகங்களுக்கு நீதிமன்றத்தால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொது மக்களுக்கு உறுதிப் படுத்தல் என்ற நோக்கில் தேசிய ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டு வரும் 'தேசிய உணவுப் பாதுகாப்பு' வாரத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேசத்தில் உணவு தயாரிப்பு, உணவு விற்பனை, உணவு விநியோகம் முதலிய செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் உணவு நிலையங்களில் திடீர் பரிசோதனை, முற்றுகை நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

இதன்போது மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகள் பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

இந்நிலையில் பழுதடைந்த சம்சா வைத்திருந்தமை, ஹோட்டல் கழிவு நீரை முறையாக அகற்றாமை, குளிர்சாதனப் பெட்டியை முறையாக பராமரிக்காமை போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் 3 உணவகங்கள் கண்டறியப்பட்டு பதிவு செய்யப்பட்டன. அதனை தொடர்ந்து அந்த 3 உண வகங்களுக்கு எதிராகவும் கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதன்படி, குறித்த உணவகங்களுக்கு 15 ஆயிரம் ரூபா, 10 ஆயிரம் ரூபா, 5 ஆயிரம் ரூபா என்றளவில் நீதிமன்றம் தண்டப்பணம் விதித்துள்ளது.

உணவகங்களின் அசுத்த நிலை, உணவைக் கையாள்வதில் உள்ள ஒழுங்கீனம், பொருத்தமற்ற உணவுகளை நீண்ட நான்களுக்கு குளிர்சாதனப்பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் சுத்தமின்மை, சமையல் பொருன்கள் தரமின்மை போன்றவற்றை கண்டறிவதற்கான பரிசோதனை நடவடிக்கைகள் தற்போது சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொதுச் சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தொடர்பில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி கூறுகையில் -

மக்களதும், பாடசாலை மாணவர்களதும் சுகாதாரம் மற்றும் உணவுச் சுகாதாரத்தை நடைமுறைப்படுத்தவும் பாதுகாக்கவும் மேம்படுத்தவுமே இத்தகைய தொடர்ச்சியான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இனிவரும் காலங்களில் பகல், இரவு நேரங்களில் இயங்கும் உணவு நிலையங்களில் திடீர் பரிசோதனைகள் இடம்பெறும். - என்றார்.

அதேவேளை மாவடிப்பள்ளி, நற்பிட்டிமுனையிலும் சில உணவகங்கள் பரிசோதிக்கப்பட்டு, அங்கும் பழுதடைந்த, மக்கள் பாவனைக்கு உதவாத உணவுப்பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதோடு, உணவக உரிமையாளர்கள் உணவுப் பரிசோதகர்களால் எச்சரிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## காதல் சண்டையால் ஒருவர் படுகொலை

இரு தரப்பினரிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொஸ்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூனுமலேவத்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுக்கல பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே இந்தச் சம்பவத்தில் சாவடைந்துள்ளார்.

காதல் விவகாரமே கொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலை செய்த சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.03.2023இல் வெளியிடப்பெற்றது.

**நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.**

பக்கங்கள்: 05

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 16 வியாழக்கிழமை 30.03.2023 கதிர் 13

## ஒரே குடும்பத்தவர் மூவர் விபத்தில் பரிதாபச் சாவு

வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் அம்பாந்தோட்டையில் புதன் கிழமை இரவு இடம்பெற்றது.

அம்பாந்தோட்டை - கொழும்பு முதன்மை வீதியில் பயணித்த லொறி ஒன்றும் கார் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மற்றைய நபர் படுகாயங்களுடன் அம்பாந்தோட்டைபொதுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

கார் சாரதியான 55 வயதுடைய குடும்பஸ்தரும், காரின் முன் ஆசனத்தில் இருந்து பயணித்த அவரது 27 வயதுடைய 2

# ஆதி லிங்க ஆலய அழிப்பை எதிர்த்து வவுனியா நகரில் பெரும் போராட்டம்

வெடுக்குநாறி ஆதிலிங்க ஆலயம் அழிக்கப்பட்டமையை எதிர்த்து வவுனியாவில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணி இடம்பெற்றது.

வவுனியா மாவட்டம், நெடுங்கேணி, வெடுக்குநாறி மலைஆதிலிங்கஆலயவிக்கிரகங்கள் உடைக்கப்பட்டதுடன் அந்த ஆலயமே முற்றாக அழிக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்தும், நீதி கோரியும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஆலய நிர்வாகம் இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது. காலை 10 மணிக்கு வவுனியா கந்தசாமி ஆலயத்தில் தேங்காய் உடைத்து வழிபட்ட பின் பேரணி தொடங்கியது.

மணிக்கூட்டுகோபுரசந்தியை அடைந்து, அங்கிருந்து பசார் வீதி ஊடாக ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து, வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி ஊடாக மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் பின்னர் தமது கண்டனம் மற்றும் கோரிக்கை அடங்கிய மனுவை மாவட்டச் செயலரிடம் கையளித்தனர்.

வவுனியா, நெடுங்கேணி, வெடுக்குநாறி மலையில் வைத்து வணங்கப்பட்டுவந்த ஆதி லிங்கம் உட்பட ஏனைய விக்கிரகங்களும் கடந்த வாரம் உடைக்கப்பட்டதுடன் அந்த ஆலயமே முழுமையாக அழிக் கப்பட்டது. இது தமிழ் இந்துக்களுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இந்த ஆலயம் தொடர்பில் வவுனியா நீதிமன்றில் வழக்கு இடம்பெற்றுவரும் நிலையிலும் ஆலயம் 2



# ஓகஸ்ட்டில் தேர்தல்



## தொடர்ந்து ஒத்திவைக்க முடியாது என்கிறார் தேசப்பிரிய

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த நேரத்தில் உள்ளூராட்சி 2

## சப்ரகமுவ பல்கலையின் 4 மாணவர்கள் திடீர் கைது

### புதிய மாணவர்களைத் தாக்கினார்களாம்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் நான்கு மாணவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்தது.

அந்தப் பல்கலைக்கழகத்தின் புதிய மாணவர்களைத் தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் இந்த நான்கு மாணவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதிய மாணவர்கள் தங்கியிருந்த விடுதிக்குள் நுழைந்து பகிடிவதை என்ற பெயரில் அவர்களைத் தாக்கிக் காயப்படுத்தினர் என்று கைதான முத்த மாணவர்கள் நால்வர் மீதும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

நான்கு மாணவர்களையும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் பலாங்கொடை பிரதேசத்தில் வைத்துக் கைதுசெய்துள்ளனர்.

தெஹிவளை, மொரட்டுவை, 2

## உணவக உரிமையாளர் சுட்டுக்கொலை



துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த உணவக உரிமையாளர் வைத்தியசாலையில் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்தது.

அஹங்கம - மிதிகம பிரதேசத்தில் உள்ள உணவகம் ஒன்றின் முன்பாக நேற்று மாலை துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான அதன் உரிமையாளரே உயிரிழந்தார்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த நிலையில் மாத்தறை பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த அவர் இன்று (30) அதிகாலை 3 மணியளவில் உயிரிழந்தார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மிதிகம பிரதேசத்தில் உணவகம் ஒன்றை நடத்தி வந்த சிந்து சந்தருவன் தொடம்கொடகே என்ற 31 வயதுடைய நபரே உயிரிழந்தார்.

நேற்று மாலை 6.15 மணியளவில் இந்தத் துப்பாக்கிச்சூடு சம்பவம் இடம்பெற்றது. கார் ஒன்றில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் ரி - 56 ரக துப்பாக்கியால் இந்தத் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டனர்.

கடந்த 2021ஆம் ஆண்டில், இந்த உணவக உரிமையாளரை இலக்கு வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட போதிலும் அதில் அவரது சகோதரர் கொல்லப்பட்டார்.

இதேவேளை, பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஹரக் கட்டா என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்னவின் உதவியாளர்களால் இந்தத் துப்பாக்கிச்சூடு மேற் கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸாரால் சந்தேகிக்கப்படுகின்றது.

## தோட்டத் தொழிலாளர்களை எவரும் ஏறி மிதிக்க முடியாது

### சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும் துறைசார் அமைச்சர் வலியுறுத்து



பெருந்தோட்டத் தொழிலாளர்களை எந்தத் தரப்பினரும் ஏறி மிதிக்க முடியாது. அவர்களின் சம்பளக் கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும்.

இவ்வாறு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அரச பெருந்தோட்ட அமைப்பொன்றின் கீழ் இயங்கி, பல வருடகாலம் மூடப்பட்டிருந்த வத்துகாமம் கோமரை தேயிலைத் தொழிற்சாலையை மீளவும் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 2

## தொழிற்சங்கத் தலைவர்களை அடக்குவதை உடனே நிறுத்து

### அரசிடம் டிலான் வலியுறுத்து

தொழிற்சங்கத் தலைவர்களை அடக்கும் செயற்பாட்டை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையேல் பாரிய விளைவுகளை அரசு சந்திக்க வேண்டி வரும்.

இவ்வாறு சுதந்திர மக்கள் சபையைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:

தொழிற்சங்கத் தலைவர்களுக்கு எதிரான வேட்டையை அரசு உடன் நிறுத்த 2



## மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு மக்கள் போராட்டம்



மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் இன்று நடைபெற்ற நிலையில், மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்புக்கு எதிராக பொது மக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் உள்ளிட்டோர் மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர்.

இதன்காரணமாக மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகப் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. இன்று காலை அபிவிருத்திக் குழுக் கூட்டம் 2

## சஜித் தரப்பிலிருந்து 17 எம்.பிக்கள் 'பல்டி'


### மேலும் ஓங்குமா ரணிலின் கை?



சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் அங்கம்வகிக்கும் 17 நாடாளுமன்ற உறுப்பினர்கள், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுடன் இணைவதற்குப் பச்சைக்கொடி காட்டியுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கான பேச்சு வெற்றியளித்துள்ளன என்று தகவல்கள் வெளியானாலும், இன்னும் உத்தியோகபூர்வமாக எவ்வித அறிவிப்பும் விடுக்கப்படவில்லை.

எதிரணியில் இருந்து அரசு பக்கம் தாவும் 17 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியில் 2



## பேருவளையில் நில நடுக்கம்

இலங்கையில் இன்றும் ஓர் இடத்தில் நில நடுக்கம் நடுக்கம் பதிவாகியுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் பேருவளைக் கடற்பிராந்தியத்தில் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் சிறியளவான நில நடுக்கம் உணரப்பட்டுள்ளது.

பேருவளையில் இருந்து சுமார் 34 கிலோ மீற்றர் தொலைவில் இந்த நில நடுக்கம் மையம் கொண்டிருந்தது.

புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த நில நடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 3.7 ஆகப் பதிவாகியுள்ளது.

இதனால் சுனாமி அச்சுறுத்தல் இல்லை என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு உடன் காணப்படவேண்டும்

### அதில்தான் நாட்டின் அபிவிருத்தி தங்கியுள்ளது என்கின்றார் ரணில்



இலங்கை அபிவிருத்தியடைய வேண்டுமானால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு விரைந்து காணப்படவேண்டும். இனப்பிரச்சினைதான் நாட்டின் முன்னேற்றத்தைக் குலைத்தது.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் நடத்தப்பட்ட 'சர்வதேச நாணய நிதியம் மற்றும் அதற்கு அப்பால்' என்ற தொனிப்பொருளிலான உரையாடலில் பிரதான உரையை ஆற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பசுமைப் பொருளாதாரத்துக்கான இலங்கையின் சாத்தியக்கூறுகள் நன்றாக இருக்கின்றன. 2

# கூரிய ஆயுதங்களால் தாக்கு: பெண் உட்பட இருவர் சாவு!

## இருவேறு பகுதிகளில் சம்பவம்

நாட்டின் இருவேறு பகுதிகளில் நேற்று (புதன்கிழமை) கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு பெண் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கம்பஹா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாகொவிட்ட பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நபர் ஒருவரால் பெண்ணொருவர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது, பலத்த காயமடைந்த பெண் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 57 வயதுடைய மாகொவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இவர்களுக்கு இடையில் நீண்ட காலமாக தொடரும் காணி பிரச்சினை காரணமாக ஏற்பட்ட வாக்குவாதம் முரண்பாடாக மாறியுள்ளதுடன் இதன்போது சந்தேக நபர் குறித்த பெண்ணின் வீட்டுக்குச் சென்று கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கம்பஹா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. 45 வயதுடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, கொஸ்கம பொலிஸ் பிரிவுக்குஉட்பட்ட முனமலெவத்த பிரதேசத்தில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பலத்த காயங்களுடன் அவிஸ்ஸாவெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 35 வயதுடைய கலுயக்கல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை. கொஸ்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஈஸ்டர் தாக்குதல் சம்பவம்: சாரா ஜஸ்மின் உயிரிழப்பு!

## மரபணுபரிசோதனை மூலம் உறுதி

உயிர்த்தஞாயிறு தாக்குதல் சந்தேகநபர் சாரா ஜஸ்மின் (புலஸ்தினி மகேந்திரன் ) உயிரிழந்துள்ளமை மரபணுபரிசோதனை மூலம் உறுதியாகியுள்ளது என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சாரா ஜஸ்மின் இந்தியாவிற்கு தப்பிச் சென்றிருக்கலாம் அல்லது சாய்ந்தமருது குண்டுவெடிப்பில் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகங்கள் எழுந்திருந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சாய்ந்தமருது சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் மரபணு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதன் பின்னர் அந்த மாதிரிகளை புலஸ்தினி மகேந்திரனின் தாயாரான ராஜரட்ணம் கவிதாவின் இரத்த மாதிரிகளுடன் ஒப்பிடும் நடவடிக்கை நீதிமன்றம் உத்தரவின் பேரில் இடம்பெற்றது.

இந்த நிலையில் கவிதாவின் மரபணுக்கள் சாய்ந்தமருதுவில் மீட்கப்பட்ட எலும்புகளின் மாதிரிகளுடன் ஒத்துப்போயுள்ளன என அறிவிப்பு வெளியாகியுள்ளது.



# பொது மக்களுக்கான சேவைகளை தடையின்றிவழங்க இராணுவம் தயார்

## அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் உறுதி

பொது மக்களுக்கு தேவையான சேவைகளை தொடர்ச்சியாக வழங்குவதற்காக அரசாங்கம் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுமக்களின் சேவைகளை சீர்குலைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு தொழிற்சங்கங்களிடம் வேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டால் அதன் போது குறித்த சேவைகளை வழங்குவதற்காக இராணுவத்தினரை ஈடுபடுத்துவதாகவும், பொதுமக்களுக்கான சேவைகளை எவ்வித தடையும் இன்றி வழங்குவதற்கு இராணு வத்தினர் தயாராக இருக்கின்றார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்காக இராணுவத்தினருக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை நடத்தி செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் ஒருபோதும் பின்வாங்குவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்

## இனப்பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை உடனடியாக அதில் இறங்கி அதனைத் தொடங்கவேண்டும்.

நாட்டின் வளங்களை அதிகமாக வீணடித்த பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் அல்லது மின்சார சபைக்கு ஆதரவளிக்கவன்றி, வறியவர்கள் மற்றும் நலிவடைந்தவர்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்புக்கே பணம் தேவைப்படுகின்றது.

டி.எஸ். சேனநாயக்கவின் முன்மொழிவுகளைக் கட்டியெழுப்பாதது மற்றும் 1965 இல் ஜேனோய் அறிக்கையை நடைமுறைப்படுத்தாதது உட்பட இலங்கையின் அபிவிருத்தியில் தவறவிட்ட வாய்ப்புக்களைப் பட்டியலிடலாம்.

1978 இல் இனப்பிரச்சினையானது நாட்டின் முன்னேற்றத்தைக் குலைத்தது. மேலும் நாடு மீண்டும் தனது நிலைப்பாட்டை எடுப்பதற்கான வாய்ப்பை இழந்தது.

இதுவே இலங்கைக்கு ஒரு தீர்க்கமான தெரிவை மேற்கொண்டு, முன்னோக்கிச் செல்வதற்கு அல்லது மீண்டும் பின்னோக்கிச் செல்லும் அபாயத்தை எதிர்கொள்வதற்கான கடைசி வாய்ப்பு.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்திற்கு அப்பால் சென்று அடுத்த தலைமுறைக்கு வளமான சமூகத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்துவது அவசியமாகும் – என்றார்.

## தோட்டத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'இலங்கையில் வணிகரீதியான தேயிலை உற்பத்திக்கு, இந்தத் தொழிலாளர்கள் 150 வருடகாலம் பங்களிப்பு வழங்கி வருகிறார்கள். இவர்களுக்கு ஆயிரம் ரூபா நாட் சம்பளம் போதாது என்பதை அரசு உணர்கின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளக் கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும். இந்த நிலைப்பாட்டில் நான் உறுதியாகவுள்ளேன். – என்றார்.

## சப்ரகமுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பலாங்கொடை மற்றும் வெலிமடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பலாங்கொடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## சஜித் தரப்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைவார்கள் என்றும் தெரியவருகின்றது.

அவர்களுள் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உறுப்பினர்களள் இருவரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலரும் அடங்குகின்றனர் என்றும் அறியமுடிகின்றது.

## ஒரே குடும்பத்தவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகனும் விபத்து இடம்பெற்ற இடத்திலேயே உயிரிழந்தனர்.

காரின் பின் ஆசனத்தில் இருந்து பயணித்த கார் சாரதியின் சகோதரரான 48 வயதுடைய குடும்பஸ்தர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

லொறியின் சாரதியான 29 வயதுடைய இளைஞரைக் கைது செய்த பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தொழிற்சங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். தேசிய வளத்தைக் காக்கப் போராடிய தொழிற்சங்கத் தலைவர்கள் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டமை தவறான முன்னுதாரணமாகும். எனவே, தன்னிச்சையாகச் செயற்படுவதை அமைச்சர் கஞ்சன நிறுத்திக்கொள்ள வேண்டும் – என்றார்.

## ஓகஸ்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பது குற்றமாகும்.

இது ஒரு நாட்டில் நடக்கக் கூடாத விடயம். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கின்றேன்.

தேர்தலைத் தொடர்ந்து ஒத்திவைக்க முடி யாது. தேர்தலை விரைந்து நடத்த வேண்டும் –என்றார்.

## ஆதிலிங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்றே அழிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் அந்த ஆலயம் இருந்த இடம் கூகுள் வரைபடத்தில் புத்த விகாரை ஒன்றின் பெயரால் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயலுக்குக் கண்டனம் தெரிவிப்பதுடன், இந்த விசமச் செயலை செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்றும் பேரணியில் கலந்துகொண்டோர் வலியுறுத்தினர்.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'வெடுக்குநாறிமலை மீதான தாக்குதல் கௌதம புத்தரின் ஆன்மிகத் தோல்வி', 'ஈழத்தமிழனை வேரறுக்க நினைக்காதே', 'வெடுக்குநாறி எங்களின் இடம்', 'மத சுதந்திரத்தை தடுக்காதே', 'தொல்பொருள் திணைக்களமே வெளியேறு' போன்ற முழக்கங்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுப்பினர். பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டப் பேரணியாகச் சென்ற மக்கள் வைத்தியசாலை சுற்றுவட்ட பகுதியில் அமைந்திருந்த தொல்பொருள் திணைக்கள அலுவலக வளாகத்திற்குள் சென்று வாயிலை மறித்து தொல்பொருள் திணைக்களமே வெளியேறு என்றும் குரல் எழுப்பினர். சுமார் 15 நிமிடங்கள் வரை குறித்த வாயிலை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் அங்கிருந்து வெளியேறி மாவட்ட செயலகம் சென்றனர்.

மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலர் பீ.ஏ.சரத்சந்திரவிடமும், ஜனாதிபதிக்கான மகஜர் ஜனாதிபதியின் வடக்கிற்கான இணைப்பாளரும், மேலதிக செயலாளருமான ஈ.இளங்கோவனிடமும் மனுக்கள் கையளிக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்களும் மனு வழங்கப்பட்டது.

இந்த விடயத்தை ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபயின் மேலதிக செயலாளர் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோர் இணைந்து வாக்குறுதி வழங்கினர். அதையடுத்துப் போராட்டக்காரர்கள் அங்கிருந்து சென்றனர்.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், செ.கயேந்திரன், செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சிவசக்தி ஆனந்தன், சி.சிவமோகன் மற்றும் பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், சமயப் பெரியோர்கள், சமூக ஆர்வலர்கள், பல்கலைகழக மாணவர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், காணாமல் போன உறவுகளின் சங்கத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## மட்டக்களப்பு மாவட்ட...













(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கிய நிலையில், மாவட்டச் செயலகத்துக்கு ஊர்வலமாக வந்த பொதுமக்கள் மாவட்ட செயலகத்துக்குள் நுழைய முற்பட்டவேளையில், பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. மாவட்ட செயலகத்துக்குள் பொதுமக்கள் நுழைய முடியாதவாறு வாயில் கதவுகள் இறுக்கி மூடப்பட்டன.

இதையடுத்து மாவட்ட செயலகக் கதவை மறித்து பொதுமக்களும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனும் மறியல் போராட்டத்தில் குதித்தனர்.

வாகனேரி பகுதியில் சூரிய மின்கல மின்திட்டத்தை அமைப்பதற்காக விவசாயக் காணியை எடுக்க முனையும் செயற்பாட்டைக் கண்டித்தும், வாகரைப் பகுதியில், இல்மனைட் அகழ்வை மீண்டும் தொடங்குவதற்கு முன்னெடுக்கப்படும் ஏற்பாடுகளை நிறுத்தக் கோரியும், வாகரைப் பகுதியில் காணிகள் அபகரிக்கப்படுவதை நிறுத்தக் கோரியும் இந்தப் போராட்டம் நடத்தப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடத்தாமல், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை நடத்தி, காணி தொடர்பாக ஆட்சியாளர்களுக்குச் சாதகமான தீர்மானங்களை எடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

இதேநேரம், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு வருகை தந்த, இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனையும் மாவட்டச் செயலகத்திற்குள் நுழைய பொலிஸார் அனுமதிக்காததால் இரு தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

உடனடியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பொதுமக்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்படாமல், ஒரு சில அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் முன்னெடுக்கும் செயற்பாடுகள் காரணமாக மாவட்டம் பல கஷ்டங்களை எதிர்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன என்று குறிப்பிட்டார்.

நீண்ட நேர இழுபறியின் பின்னர் இராஜாங்க அமைச்சரையும், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மற்றும் ஊடகவியலாளர்களையும் மாவட்டச் செயலகத்துக்குள் செல்வதற்குப் பொலிஸார் அனுமதித்தனர்.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டவேளை மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாகக் குழப்பம் ஏற்பட்டது.

மக்கள் வெளியே போராடிக்கொண்டிருக்கும் நிலையில், அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றிவிட்டு அல்லது அவர்களின் கோரிக்கை தொடர்பில் சரியான பதிலை வழங்கிவிட்டு, மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை நடத்துங்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கோரினார். இதனால் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருக்கும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, மக்களின் கோரிக்கைக்குப் பதில் வழங்கப்படாத நிலையில், இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதில் பயனில்லை எனத் தெரிவித்து இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அங்கிருந்து வெளியேறிச் சென்றார்.

அதைத் தொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சில வினாக்களை, அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எழுப்பிய நிலையில், அதற்கு உரிய பதில் கிடைக்காததையடுத்து, அவரும் கூட்டத்தில் வெளிநடப்புச் செய்தார்.

# மக்கள் சக்தியின் 40 உறுப்பினர்கள் விரைவில் ஐ.தே.கவில் இணைவர்!

## லக்ஷ்மன் விஜேமான்ன அபரிமித நம்பிக்கை

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண ஜனாதிபதி எடுத்த சில தீர்மானங்கள் மக்களுக்கு கஷ்டமாக இருந்தபோதும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியின் பின்னர் மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் வீழ்ந்திருக்கும் நாட்டை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் மாத்திரமே கட்டியெழுப்ப முடியும் என்பதை உணர்ந்துவரும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் 40 இற்கும் அதிகமானவர்கள் விரைவில் ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து செயற்பட இருக்கின்றனர் என ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் விஜேமான்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ளாவிட்டால் நாடு டொலர் பிரச்சினை மின்சார பிரச்சினை என பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என ரணில் விக்ரமசிங்க எதிர்க்கட்சியில் இருக்கும்போது அன்றைய அரசாங்கத்துக்கு தெரிவித்து–வந்தார்.

ஆனால் அன்று அந்த அரசாங்கத்தில் இருந்தவர்கள் ரணில் விக்ரமசிங்கவை கேலி செய்தார்கள். விமர்சித்துவந்தார்கள். அன்றைய அரசாங்கம் முறையாக நடவடிக்கை எடுக்கத் தவறியதால் நாடு பாரிய பொருளா தார நெருக்கடிக்கு ஆளாகியது.

ஆனால் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதுடன் பொருளாதார பிரச்சினைக்கு தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்தின் உதவியையே நாடினார்.

அன்றைய அரசாங்கத்தால் செய்ய முடியாமல் போனதை ரணில் விக்ரமசிங்க தற்போது தனிமனிதாக இருந்து அதனைச் செய்துள்ளார். எதிர்க்கட்சிகளுக்கும் ஜனாதிபதி பல தடவைகள் ஆதரவளிக்குமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் அவர் கள் யாரும் முன்வரவில்லை.

மேலும் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள பல கடினமான தீர்மானங்களை எடுக்கவேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டது.

அதனால் மக்களுக்கு மிகவும் கஷ்டமான நிலையை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. இருந்தபோதும் தற்போது நாணயநிதியத்தின் உதவி கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. எதிர்வரும் காலங்களில் மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய பல தீர்மானங்களை ஜனாதிபதி எடுப்பார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

மேலும்சர்வதேசநாணயநிதியத்தின் உதவியைக்விட அதன் அங்கீகாரம் நாட்டின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தச் செய்திருக்கிறது. குறிப்பாக பெரிஸ் சமூகம் இலங்கையின் கடனை 15 வருடங்களுக்குப் பிள்தள்ளி இருக்கிறது.


அதேபோன்று உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன எமக்கு உதவுவதற்கு தற்போது தயாராகி இருக்கின்றன. சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து இருக்கிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கை மீது நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இவை அனைத்துக்கும் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு காட்டிய பச்சைக்கொடியே காரணமாகும்.

எனவே, வங்குரோத்து அடைந்திருக்கும் நாட்டை மீளக் கட்டியெழுப்ப ரணில் விக்ரமசிங்கவால் மாத்திரமே முடியும் என்பதைத் தற்போது அனைவரும் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர்.

அதனால் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிக்க ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 40 இற்கும் மேற்பட்டவர்கள் அவருடன் விரைவில் இணைந்துகொள்ள இருக்கின்றனர். – என்றார்.

# இலங்கையின் நல்லிணக்க செயற்பாட்டுக்கு உதவுவோம்!

## தென்னாபிரிக்க ஜனாதிபதி உறுதி



இலங்கையின் நல்லிணக்க செயன்முறைக்கு உதவும் நோக்கில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான தென்னாபிரிக்காவின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்குத் தாம் தயாராக இருப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி சிரில் ரமபோஷா உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்கப்பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பது தொடர்பாகக் கலந்துரையாடும் நோக்கில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான குழுவினர் கடந்த 21 – 25 ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அமைச்சரவை உபகுழுவால் முன்மொழியப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்கப்பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கு இவ்வாண்டு ஜனவரி மாதம் அமைச்சரவை அனுமதியளித்தது. மூன்றுதசாப்தகால உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை, நிலையான சமாதானத்தை நோக்கிப் பயணிக்க வேண்டுமெனில் உண்மையைக் கண்டறிவதற்கான சுயாதீன உள்ளகப்பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பது அர்த்தமுள்ளதோர் வழிமுறையாக அமையுமென அந்த முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் இந்த முன்மொழிவை நடை

முறைப்படுத்துவதற்கும், உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான சட்டத்தைத் தயாரிப்பதற்கான கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கும் வெளிவிவகார அமைச்சர் மற்றும் நீதியமைச்சருக்கு அமைச்சரவை அதிகாரமளித்துள்ளது.

எனவே அந்தச் செயன்முறைக்கு ஆதரவளிக்கும் வகையில் தென்னாபிரிக்க அரசாங்கத்தின் அழைப்பின் பிரகாரமே இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த விஜயத்தின்போது தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோஷாவை சந்தித்துக் கலந்துரையாடிய அமைச்சர்களான அலி சப்ரி மற்றும் விஜயதாஸ ராஜபக் ஷ ஆகியோர், அந்நாட்டின் சர்வதேச விவகாரங்கள், ஒருங்கிணைப்பு அமைச்சர் நலேடி பன்டோர் மற்றும் நீதி, அரசமைப்பு மேம்பாட்டு அமைச்சர் ரொனால்ட் லமோலா ஆகியோருடன் இருதரப்பு சந்திப்புக்களையும் நடத்தியிருந்தனர். அது மாத்திரமன்றி தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் அரசலமைப்பு மேம்பாட்டு அமைச்சர், தென்னாபிரிக்க அரச வழக்குரைஞர்கள் அலுவலக அதிகாரிகள், தென்னாபிரிக்க சட்டத்தரணிகள் சங்க அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய தரப்பினருடனும் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

அந்தவகையில் தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோஷாவுடனான சந்திப்பின்போது, ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவுடனான நட்பை நினைவுகூர்ந்த அவர், இலங்கையுடனான இருதரப்புத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்குத் தான் விரும்புவதாகக் குறிப்பிட்டார்.

அதேபோன்று இலங்கையின் நல்லிணக்க செயன்முறைக்கு உதவும் நோக்கில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான தென்னாபிரிக்காவின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி சிரில் ரமபோஷா உறுதியளித்தார். அதேபோன்று அமைச்சர் அலி சப்ரிக்கும் தென்னாபிரிக்க சர்வதேச விவகாரங்கள் மற்றும் ஒருங்கிணைப்பு அமைச்சர் நலேடி பன்டோருக்கும் இடையிலான சந்திப்பின்போது இருதரப்பு விவகாரங்கள் குறித்தும், இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

மேலும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தி, மேம்படுத்துவதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குமான முயற் சிகளில் இலங்கை அரசாங்கத்தால் அடையப்பட்டுள்ள முன்னேற் றங்கள் தொடர்பில் அமைச் சர் அலி சப்ரியால் தென்னாபிரிக்க அமைச்சருக்கு விளக்கமளிக்கப்பட்டது. அத்தோடு இலங்கை விவகாரத்தில் தென்னாபிரிக்காவின் செயன்முறை பின்பற்றப்படவேண்டும் என்றும், அதன்படி இலங்கை மக்களுக்குப் பொருந்தக்கூடிய உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை ஸ்தாபிப்பதற்கான அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கும் இருதரப்பினரும் இணக்கம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# ராகுல் காந்திக்கு கிடைத்த தண்டனை ஏற்பாடுகளை உள்ளடக்கிய சட்டம் இலங்கையிலும் வரவேண்டும்!

## சாகர காரியவசம் கூறுகின்றார்




இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்திக்கு கிடைத்த தண்டனை ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக ஊழல் ஒழிப்பு சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கத்தில் ஊழல் ஒழிப்பு தொடர்பான சட்டம் உருவாக்கப்படுவதை அதிஷ்டமாகக் கருதுகிறோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமு–னவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கை யில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் சிறந்த திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். போராட்டத்தின் ஊடாகப் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது என்பதை நாட்டு மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

பொருளாதார மேம்பாட்டுக்கும், அத்தியாவசிய சேவைத் துறைக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் தொழிற்சங்கத்தினர் முன்னெடுக்கும் பணிப்புறக்கணிப்பு போராட்டங்களுக்கு எதிராக அரசாங்கம் செயற்பட வேண்டிய தேவையில்லை. நாட்டு மக்களே அவர்களுக்குத் தக்க பாடம் கற்பிப்பார்கள். இறுதி தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பை மக்களிடம் ஒப்படைத்து விட வேண்டும்.

ஊழலை ஒழிப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் ஊழல் ஒழிப்புக்கு எதிராக எவ் வித நடவடிக்கைகளை யும் எடுக்கவில்லை.

மாறாக, அந்தக் காலப்பகுதியில் ஊழல்கள் வலுப்பெற்றன. ராஜபக்ஷர்கள் திருடர்கள், அரச நிதியை மோசடி செய்தார்கள் என அரசியல் நோக்கத்துக்காக மாத்திரம் பொய்யான குற்றச்சாட் டுக்கள் முன்வைக்கப்பட்டன.

ஊழல் ஒழிப்பு சட்டத்தை உருவாக்க அரசாங்கம் ஆரம் பக்கட்ட நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் இந்த சட்டம் இயற்றப்படும். ஊழல் ஒழிப்புக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கத்தில் ஊழல் ஒழிப்பு சட்டத்தை உருவாக்குவதை அதிஷ்டமாகக் கருதுகிறோம்.

சேறு பூசும் வகையிலான அரசியல் பிரசாரங்களுக்கு எதிராக இந்திய நீதிமன்றம் சிறந்த தீர்ப்பை வழங்கியுள்ளது. இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி, இந்திய பிரதமர் நரேந்திர மோடியை அவமதிக்கும் வகையில் தவறான கருத்தை வெளியிட்டார்.

இதற்கு நீதிமன்றம் கடுமையான உத்தரவை பிறப்பித்துள்ளது.

ஆகவே இந்த தண்டனை ஏற்பாட்டை இயற்றப்படவுள்ள ஊழல் ஒழிப்பு சட்டத்துக்கு உள்வாங்க வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது நாட்டில் இயல்பானதொரு விடயமாகி விட்டது. சிறந்த மாற்றத்துக்காக கடுமையான தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும். – என்றார்.

# எரிபொருள் விநியோகத்திற்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதிக்கு வரவேற்பு!

## தெரிவிக்கிறார் ஹர்ஷ டி சில்வா



நாட்டில் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதியளிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை வரவேற்கத்தக்கது. இது தொடர்பாக முற்போக்காக சிந்திக்க வேண்டும்.

இதன் மூலம் எரிபொருள் சந்தையில் போட்டி நிலைமை அதிகரிக்கும் போது , நுகர்வோருக்கு பல நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர் டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டுள்ளமை சாதகமான நடவடிக்கையாகும். எனினும் மே மாதம் மீண்டும் விலைத் திருத்தங்களை மேற்கொள்ளும் போது தற்போது குறைக்கப்பட்டுள்ள அதே மட்டத்தில் விலைகளை அதிகரிக்கக் கூடாது. மாறாக சமநிலையானதொரு விலை திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போது நாட்டில் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதியளிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதனை நாம் முற்போக்காக சிந்திக்க வேண்டும். இந்த நிறுவனங்கள் 1960 களில் இலங்கையில் எரிபொருள் விநியோகத்தை மேற்கொண்டன. எவ்வாறிருப்பினும் அதன் பின்னர் அவற்றுக்கான அனுமதி மறுக்கப்பட்டது.

எனவே, இந்நிறுவனங்கள் சிங்கப்பூரில் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்க ஆரம்பித்தன. இதன் பிரதிபலனாகத் துளியளவும் எரிபொருள் வளமற்ற நாடான சிங்கப்பூர் எரிபொருள் விநியோக கேந்திரமாக வளர்ச்சியடைந்துள்ளது. எனவே, இவ்வாறான விடயங்கள் தொடர்பில் சிந்தித்து செயற்பட வேண்டும்.

குறித்த நிறுவனங்கள் இலங்கையில் எரிபொருள் விநியோக நடவடிக்கையில் ஈடுபடும் போது போட்டி அதிகரிக்கும். எனவே, எரிபொருள் விலை மற்றும் தட்டுப்பாடு இன்மை போன்று சாதகமான நலன்கள் நுகர்வோருக்குக் கிடைக்கப்பெறும்.

இவ்வாறான மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட முன்னர் சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டுக்கமைய ஊழல் , மோசடிகளை ஒழிப்பதற்கு முன்னுரிமையளிக்க வேண்டும். – என்றார்.

# பயங்கரவாத புதிய எதிர்ப்புச் சட்டம் எனத் தெரிவித்து ஜனநாயகவிரோத சட்டமென்று வெளியிடப்பட்டுள்ளது!

## அரசைச் சாடுகிறார் விஜித்த ஹேரத்

அரசாங்கம் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் எனத் தெரிவித்து ஜனநாயக விரோத சட்டம் ஒன்றையே வர்த்தமானி மூலம் வெளியிட்டிருக்கிறது.

இந்த சட்டத்தின் பிரகாரம் தொழிற்சங்க போராட்டம் இடம்பெறுவது தொடர்பில் ஊடகங்களில் அறிவுறுத்தும் ஊடகவியலாளரும் பயங்கரவாதியாகவே கருதப்படுவார் என மக்கள் விடுதலை முன்னணி ஊடகப்பேச் சாளர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்கம் வர்த்தமானிப்படுத்தி இருக்கும் புதிய பங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

அரசாங்கம் கொண்டுவந்திருக்கும் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஐக்கிய நாடுகள் அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோல்களுக்கு விரோதமானது.

ஏனெனில் வேலை நிறுத்தப்போராட்டம் தொடர்பில் இலத்திரனியல் ஊடகங்களில் அல்லது வேறு ஊடகங்கள் ஊடாக அறிவுறுத்துவதும் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் பிரகாரம் பயங்கரவாத செயலாகும்.

அதன் பிரகாரம் தொழிற்சங்க போராட்டம் ஒன்று தொடர்பாக கையேடு விநியோகித்தல், ருவிட்டர் தகவல் அனுப்புதல் வட்ஸ் அப் தகவல் அனுப்புதல் பயங்கரவாத செயலாகவே அதன் சடடமூலத்தின் 118 ஆவது சரத்தில் அதுதொடர்பான விதிகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று ஏதாவதுதொரு தொழிற்சங்க போராட்டம் தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் அறிக்கையிட்டால் அவரையும் இந்த சட்டத்தின் பிரகாரம் கைதுசெய்ய முடியுமாகிறது.

அரசாங்கம் பயங்கரவாத வெளியீடுகளாக வரைவிலக்கனப்படுத்தும் வெளியீடுகளின் உள்ளடக்கங்களை இலத்திரனியல் ரீதியாக அனுப்புவதும் பயங்கரவாதச் செயலாகவும் சட்ட மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் யாராவது தொழிற்சங்க போராட்டம் ஒன்று தொடர்பில் கதைத்தால் அவர் பயங்கரவாதியாகப் பெயரிடப்படுவார். அதேபோன்று ஏதாவது ஒரு நடவடிக்கையை அனைத்து மக்களும் ஒன்றிணைந்து மேற்கொண்டாலும் பயங்கரவாத முத்திரை குத்தமுடியும் போன்ற சரத்துக்களும் அதில் இருக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரேரணைகளை செயற்படுத்திக்கொண்டு, மக் களுக்கு வாழமுடியாத மிகவும் கடுமையான நிலைமை நாள்தோறும் ஏற்பட்டு வருவதால், அதற்கு எதிரான மக்களின் எதிர்ப்பை அடக்குவதற்கே பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்ற பெயரில் வர்த்தமானி படுத்தி இருக்கின்றமை, ஜனநாயக லிரோத சட்டமாகும். – என்றார்.



# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு மருந்துகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன!

நாட்டின் பொருளாதார நெருக்கடியால் சுகாதாரத்துறை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது அரச வைத்தியசாலைகளே தனிப்பட்ட கொடையாளர்களின் உதவியுடனே சாதாரண மக்களுக்கான மருத்துவசேவையைப் பெரிதும் ஆற்றுகின்றன.

அந்தவகையில், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் தேவை கருதி சுழிபுரம் மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த சபாநாயகம் சிவகுமார் குடும்பத்தினர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு 3 லட்சம் ரூபா பெறுமதியிலான அத்தியாவசிய மருந்துகளை வழங்கி வைத்தனர்.

இந்த மருந்துகளை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.றெமான்ஸ் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் சி.றமேஸ் ஆகியோர் வைத்தியசாலை சார்பாகப் பெற்றுக்கொண்டனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## தோற்கடிக்கப்பட்ட மக்கள் எழுச்சி

அரசுத் தலைவர் பதவியில் ரணில் விக்கிரமசிங்கவை இருத்தியது அரகலய போராட்டம். ரணில் அந்தப் பதவிக்கு வரவேண்டும் என்று அந்தப் போராட்டம் விரும்பியிருக்கவில்லை என்றாலும் போராட்டத்தின் பயனை அறுவடை செய்த ஒரே மனிதர் அவர்தான்.

அரகலய போராட்டத்தை அவர் முழுமையாக ஆதரித்தார். அமைதி வழியிலான அந்தப் போராட்டத்திற்கு இடைஞ்சல்களோ தடங்கல்களோ ஏற்படுத்தப்படக் கூடாது என்று அப்போதைய ஆட்சியாளர்களான ராஜபக்சக்களுக்கு நிர்ப்பந்தமும் கொடுத்தார். மிகத் தாமதமாக அந்தப் போராட்டத்தை அடக்குவதற்குக் கோட்டாபய ராஜபக் நடவடிக்கை எடுப்பதற்குள் காலங் கடந்திருந்தது.

கோட்டாபயவின் பதில் நடவடிக்கைகளால் கட்டுமீறிய அரகலய போராட்டம் கடைசியில் பலவந்தமான முறையில் அவரை வெளியேற்றியது. அப்போதும் ரணில் அமைதியாகவே இருந்தார். ஆனால், அதன் விளைவாகத் தனக்குப் பதவி கிடைத்ததும் அரகலயவை வன்முறை என்றார். வன்முறை மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு இடமளிக்க முடியாது என்றார்.

இப்போது அமைதிப் போராட்டமாக இருந்தாலும் காலி முகத் திடலுக்குள் நுழைவதற்கே அனுமதி வழங்கப்படுவதில்லை என்ற அடக்குமுறையைப் பயன்படுத்தி தன்னைத் தற்காத்துக் கொள்கிறார்கள். மீண்டும் ஒரு மக்கள் கிளர்ச்சியின் மூலம் தான் பதவி கவிழ்க்கப்பட்டுவிடக்கூடாது என்பதில் அவர் கவனமாக நடந்துகொள்கிறார். அதற்குத் தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்துவது மட்டுமன்றி முப் படையினரையும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

இவ்வாறு அரகலய போராட்டத்தின் பயனை அனுபவித்த ரணில் விக்கிரமசிங்க, அத்தகைய மக்கள் எழுச்சிய மீண்டும் ஏற்படாத வகையில் அதனை நீர்த்துப்போகச் செய்கிறார் என்பதுடன் அந்தப் போராட்டத்தின் அடிப்படைக் கோரிக்கையான முறைமை மாற்றத்தையும் இப்போது நீர்த்துப்போக வைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். அதற்கு பொருளாதார மறுசீரமைப்பு என்பதைக் கவசமாக்கிக் கொள்கிறார்கள்.

இலங்கையில் இன்னும் 4 ஆண்டுகளின் பின்னரே மக்கள் கோரிய முறைமை மாற்றம் சாத்தியமாகும் என்று அவர் ஆனந்தாக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பேசும்போது தெரிவித்திருக்கிறார்.

அரகலய போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் நாட்டில் முழுமையான முறைமை மாற்றம் ஒன்றையே கேட்டார்கள் என்று கூறிவந்த ரணில் விக்கிரமசிங்க இப்போது அந்த மாற்றத்தை நிகழ்த்த வேண்டுமா என்பதையே நான்கு வருடங்களுக்குப் பின்னரே தீர்மானிக்க முடியும் என்கிறார்.

ஆக மொத்தத்தில் பழைய குருடி கதவைத் திறவடி என்கிற கதையாக, இலங்கையின் மக்கள் எழுச்சியும் போராட்டங்களும் வீணடிக்கப்பட்டு அதே பழைய இத்துப்போன தோற்றுப்போன சகதிக்குள்ளேயே மக்கள் உழல வேண்டிய நிலை மீண்டும் உருவாக்கப்படுமோ என்கிற பயம் ஏற்படுகின்றது. அரசுத் தலைவர் பயணிக்கும் பாதை இந்தப் பயத்தை இன்னும் உச்சமடையச் செய்கிறது.

ராஜபக்சக்களின் துணையோடு ரணில் பதவிக்கு வந்தபோது அரகலய போராட்டம் காட்டிக்கொடுக்கப்பட்டதாக விமர்சிக்கப்பட்டது. இப்போது அதன் நோக்கமும் சிதைக்கப்பட்டிருப்பதன் மூலம் அந்தப் போராட்டமே முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

# புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்துகிறது!

## சந்திரிகா கருத்து




புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தை தோற்கடிக்க அனைவரும் முன்வரவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்துகின்றது என கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வேண்டுகோள் விடுத்துள்ள அவர், இந்த சட்டமூலத்தை தோற்கடிக்க மக்கள் ஐக்கியப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாங்கள் எங்கள் அரசியல் வேறுபாடுகளை மறந்துவிட்டு இந்த இடத்தில் சமூக செயற்பாட்டாளர்கள் என எங்களைக் கருதுவோம் இந்தப் புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை தோற்கடிப்பதற்கு நாங்கள் ஒன்றிணையவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வேகத்தில் நிலைமை சென்றால் நாங்கள் இன்று சுதந்திரமாகக் கருத்துதெரிவிப்பது பேசுவது போன்று எதிர்காலத்தில் பேச முடியாத நிலையேற்படும் எனத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி ஜனநாயகம் என்பதற்கு இடமிருக்காது நாங்கள் அனைவரும் கைது செய்யப்படுவோம் எனவும் தெரிவித்துள்ளார். அரகலய இலங்கைக்கு மிக முக்கியமான பாடமொன்றைக் கற்றுத்தந்தது, மக்கள் ஐக்கியப்பட்டு உறுதியாக மாற்றத்தைக் கோரினால் மாற்றம் சாத்தியமாகும் என்பதே அது எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஆகவே அரகலய மூலமாகவோ அல்லது புரட்சி மூலமோ எதனையாவது செய்ய வேண்டும் எனவும் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

# இந்திய ரூபா பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கைகள் ரிசேர்வ் வங்கி தலைவருடன் மொராகொட ஆராய்வு!



இந்திய ரூபாவைப் பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரிப்பது தொடர்பாக இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொராகொட இந்திய ரிசேர்வ் வங்கியின் ஆளுநர் ஶ்ரீசக்தி ஹன்ட தாசுடன் பேச்சுகளை மேற்கொண்டுள்ளார்.

இந்தியாவின் உயர் அதிகாரிகளுடனான தனது ஈடுபாட்டைத் தொடரும் இலங்கைத் தூதுவர் மும்பாயில் இந்திய ரிசேர்வ் வங்கியின் தலைமையகத்தில் ரிசேர்வ் வங்கியின் ஆளுநரை சந்தித்து பேச்சுகளை மேற்கொண்டுள்ளார்.

இருவருக்கும் இடையிலான பேச்சுகள் மிகவும் சுமுகமான சூழ்நிலையில் இடம்பெற்றுள்ளன. இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு உட்பட பல விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாக இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார ஸ்திரதன்மையை உறுதி செய்வதற்கான இந்தியாவின் உதவிகளுக்கு இந்த சந்திப்பில் மிலிந்தமொரகொட நன்றியைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இந்திய ரிசேர்வ் வங்கியின் நேரடி தலையீட்டுடன் இடம்பெற்ற பரிமாற்ற ஏற்பாடுகள் மற்றும் கொடுப்பனவுகளை ஒத்திவைத்தல் போன்றவற்றுக்கு மிலிந்தமொராகொட நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைப்பதில் இந்தியா ஆற்றிய பங்களிப்பிற்காகவும் மிலிந்த மொராகொட நம்பிக்கையை தெரிவித்துள்ளார்.

இந்திய ரிசேர்வ் வங்கியின் ஆளுநரும் இலங்கைத் தூதுவரும் இலங்கையின் பொருளாதாரமீட்சிக்கானவழிவகைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

மின்சாரம் எரிசக்தி துறைமுகங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுலாத் தகவல் தொழில்நுட்ப சேவைகள் போன்ற துறைகளில் பொருளாதாரங்களை அதிகளவில் ஒருங்கிணைப்பதன் மூலம் இந்தியா இலங்கையின் பொருளாதாரமீட்சிக்கு வழங்கக் கூடிய பங்களிப்பு குறித்தும் இருவரும் ஆராய்ந்துள்ளனர்.

குறிப்பாக இந்திய ரூபா விரிவாக்கம் தொடர்பாக இருவரும் ஆராய்ந்துள்ளனர்.

# பௌத்த தர்மத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை பௌத்தர்களே திருத்துதல்வேண்டும்!

## யாழ். இந்து சமயப் பேரவையின் தலைவர் கூறுகிறார்



இலங்கை தீவில் தம்மை பௌத்தர்கள் என்று கூறிக்கொண்டு பௌத்த தர்மத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை திருத்த உலகில் உள்ள பௌத்தர்கள் முன்வர வேண்டும். இவர்கள் திருந்தாவிட்டால் இந்த நாடு உருப்படாது என யாழ். இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் இன்று (வியாழக்கிழமை) ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டு, அந்த இடங்களில் புத்தர் சிலைகள் எழுப்பப்பட்டு வருகின்றமை தொடர்பாக கருத்துரைக்கையில் அவர் மேலும் கூறியதாவது,

உலகுக்கு மகோன்னதமான தர்மங்களை போதித்த புத்த பகவானின் புனித நாமங்களை உச்சரித்துக்கொண்டு அவரது போதனைகளை சற்றேனும் மதியாமல், ஏனைய மதத்தவரின் வழிபாட்டிடங்களையும், வழிபாட்டுச் சின்னங்களையும் துவம்சம் செய்கின்றனர்.

அத்தோடு, தேவையற்ற விடயங்களுக்குள் தலையை நுழைத்து பல பௌத்த துறவிகள் ஆர்ப்பாட்டங்கள், அடாவடித் தனங்கள், வன்முறைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் தமது தர்மங்களை மறந்து, புத்த பகவானின் பெயரில் புதிய மதத்தையே ஸ்தாபித்து, அந்த மகானுக்கு களங்கத்தை ஏற்படுத்த முற்படுகிறார்கள்.

எமது இந்து மதத்தில் புதிய உத்வேகத்தோடு பயணிக்க புத்த பகவானின் போதனைகள் உதவியமையை இங்கு குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இவர்கள் இங்கு இந்துக்களின் வழிபாட்டிடங்களைத் தகர்த்திவிட்டு, புத்த பகவானுக்கு சிலை எழுப்புவதையே தொழிலாக கொண்டுள்ளார்கள்.

புத்த பகவான் சிலை வழிபாட்டையே விரும்பவில்லை என்ற அடிப்படை அறிவே அற்றவர்களாக காணப்படுகிறார்கள். இவர்களுக்கு உலகில் உள்ள பௌத்தர்கள், பௌத்த தர்மத்தை போதிக்க முன்வருவதே அவசியமாகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் வர்த்தக நடவடிக்கை ஈடுபாட்டுக்கான ஆர்வத்தை ஜப்பானிய வர்த்தகர்கள் இழந்துள்ளனர்

## ஜப்பான் தூதுவர் பகிரங்க அறிவிப்பு



இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான ஆர்வத்தை இழந்துவிட்டதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் ஜப்பானிற்கும் இடையில் 1952 ஆம் ஆண்டுமுதல் பல தசாப்தங்களாக இராஜதந்திர வர்த்தக உறவுகள் காணப்பகின்ற போதிலும் இலங்கை அரசாங்கத்தின் திடீர் மற்றும் தன்னிச்சையான கொள்கைகளால் ஜப்பானிய வர்த்தகர்கள் தற்போது இலங்கையில் வர்த்தகம் செய்வது குறித்த நம்பிக்கையை இழந்துள்ளனர் என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோசி ஹிடியாகி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பொருளாதார ஆட்சிமுறை மற்றும் வெளிப்படைதன்மை தொடர்பில் அடிக்கடி கொள்கை மாற்றங்கள் இடம்பெற்றன எனத் தெரிவித்துள்ள அவர், இதன்காரணமாக ஜப்பானிய வர்த்தகர்கள் இலங்கை தொடர்பான நம்பிக்கையை இழந்துவிட்டனர் எனவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற இலங்கை வாகன வர்த்தகர்கள் சம்மேளனத்தின் நிகழ்வில் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் எதிர்கால பொருளாதார நிலை மற்றும் மீட்சி குறித்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் ஊழலை இல்லாமல் செய்வதற்கான கொள்கைகள் வருமான இடைவெளியைக் குறைத்தல் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஜப்பான் தூதுவர் அரசநிறுவனங்களின் வினைத்திறனை அதிகரிப்பது தொடர்பாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## யாழ். மத்திய கல்லூரி நீச்சல் தடாகம் புனரமைப்பதற்கு டக்ளஸ் நடவடிக்கை!

யாழ். மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகத்தை புனரமைக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கடற்தொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மத்திய கல்லூரியில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடை மற்றும் பாடநூல் விநியோக நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

இந்த பாடசாலையினுடைய அதிபர் நீச்சல் தடாகத்தை மீள செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை வைத்தார்.

அவரது கோரிக்கையை மாணவர்களும் ஏற்றதன் காரணமாக இரு மாதங்களுக்குள் குறித்த நீச்சல் தடாகத்தினை மீள செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# “இந்து சமய அழிப்பை நிறுத்து”
































இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.03.2023 இல் வெளியிடப்பெற்றது.